# 500 யு.எஸ். பல்கலைக்கழகங்களில் வேலைநிறுத்தம்?

Registered as a NewsPaper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 84
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சித்திரை 23   ஸபர் 29   புதன்கிழமை [6-5-70]

கட்டிடங்களுக்கு தேவையான
சாமான்கள்
இரும்பு வகைகள்
அன்டன் வாளிகள்
(எல்லா அளவுகளிலும்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
நிதானவிலையில் பெற்றுக்கொள்ளலாம்
விஜயா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
146, ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்.
போன்:- 357

## நிக்ஸனின் கம்போடிய கொள்கைக்கு மாணவர் எதிர்ப்பு

நியூயோர்க், மே 5

அமெரிக்க பல்கலைக்கழக மாணவர்கள் நிக்சனின் வியட்னும், கம்போடியா பற்றிய கொள்கைக்கு கடும் எதிர்ப்பு காட்ட தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்கள், நேரடியாககம்போடியாவிற்கு படைகள் அனுப்பியதற்கு அமெரிக்க அரசியல் வட்டாரங்களும் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளன

அதேசமயம் அமெரிகக படைகளும், தென் வியட்னும் படைகளும் கம்போடியாவில்புதியஇலககொன்றை தாககுவதில் மும்முரமாக ஈடுபடடுள்ளன இதர தரப்பிலும் பல ஆயிரககணக்கான வீரர்கள் இத்தாககுதல் நடவடிககைகளில் ஈடுபடடுள்ளார்கள்

அமெரிககப் பல்கலைக கழக மாணவர்கள் ஒரு வேலை நிறுத்தம் மேற்கொள்ள இருக்கிறுர்கள் கடந்த சிலதினங்களாக நடாத்திய கிளர்ச்சிகளில் பலவன்முறைச் செயல்கள் இடம் பெற்றுள்ளன. நேற்று நடைபெற்ற பல்லைககழக மாணவர்கள் கிளர் சியில் நான்கு மாணவர்கள் மாண்டார்கள். இத்தகைய் நிகழ்ச்சி மாணவர்களை மேலும் அமைதியின்மையை அடையச் செய்து விட்டது.

அமெரிககா எங்கும் உள்ள 500 பல்கலைககழக மாணவர்களை கூடடாக மேற்படி வேலை நிறுத்தத்தில் கலந்து கொள்ளும் படி வேண்டுகோள் விடப்படடிருககின்றது.

அமெரிககாவில் நிகசனின் கம்போடிய பற்றிய கொள்கைககு எதிர்ப்பு வலுவடைந்து வருகின்ற அதேநேரம் உலக நாடுகள் இந்தோ - சீன நெருககடி உலக அமைதிககு பங்கம் விளைவித்துவிடும்என அஞ்சுகின்றன. சீனுவும், ரஷ்யாவும் அமெரிககாவின் செயல்களை கண்டித்திருககின்றன. கம்போடியாவுககு சகல உதவியும் அளிப்பதாகச் சீனு உறுதியளித்துள்ளது.

ஜெனிவா உடன்படிககையை அமெரிககா மீறிவிட்டது எனவும், ஏனைய சர்வதேச பிரச்னைகளை தீர்ககும் வழியில் அமெரிகாவின் நடத்தை ஒரு தேககத்தை உண்டுபண்ணிவிட்டது எனவும் ரஷ்யா குற்றம்சாட்டி உள்ளது.

இந்தோ சீனுவின் நெருககடி பெரும் உலக நெருககடி ஒன்றை ஏற்படுத்திவிடலாம் என அரசாங்கம் அச்சம் தெரிவித்துள்ளது.

கம்போடிய பற்றிய எதிர்ப்பு ஒருபுறம் இருகக மறுபுறம் - தன் பிரதிபலிப்பாக நியூயோர்க பங்கு மார்ககெடடு விலை வீழ்ச்சி அடையத் தொடங்கி உள்ளமை இங்கு குறிப்பிடத் தககது.

# சுருட்டுத் தொழிலாளர் சம்பள அறிக்கை தமிழிலும் இல்லாதது ஏன்?

## "முற்போக்குச் சக்திகளுடன் இணைந்தே உரிமை பெறுவோம்!"

— வி. பொன்னம்பலம்

மல்லாகம், செவ்வாய்

"கூட்டு முன்னணி முன் வைத்துள்ள பொதுத் திட்டத்தின் அடிப்படையில் அமைய இருக்கும் அரசாங்கத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டால் தான் உண்மையான தேசிய ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் வளர்க்க முடியும் தமிழ் மக்களின் நியாய பூர்வமான உரிமைகளை வென்று எடுப்பதற்கு ஒரே வழி தென்னிலங்கை முற்போக்கு சக்திகளுடன் இணைந்து நின்று உரிமை கோருவதே. சாதாரண சிங்களப் பொது மக்கள் தமிழரின் நியாய பூர்வமான உரிமைகளை ஏற்றுக் கொண்ட [illegible] எமக்கு கிடைக்க முடியும் கிடைத்த உரிமைகளும் நீடித்துப் பாது காக்கப்படும்".

திரு. பொன்னம்பலம் மேலும்பேசியதாவது 'தமிழ் மக்கள் கடந்த 23 வருடங்களாக தமிழ்க்காங்கிரஸ், தமிழரசு கட்சிகளின் அரசியல் தலைமையை ஏற்று வந்திருக்கின்றனர். இதன் மூலம் தமிழர் பெற்ற கஷ்டங்கள் இன்னல்கள் போக்க எமக்கு ஒரு சந்தர்ப்பம் தாருங்கள். பொதுமக்களின் நலன்கருதி பொருளாதார அபிவிருத்தி வேலைகள் போக்குவரத்துத் துறை முன்னேற்றம். படித்த வேலையற்ற வாலிபர்களின் வேலையில்லாப் பிரச்சனை தீர முதன்மைதந்து உழைப்பேன்.'

நீதிமன்றங்களில் சிங்களம் [illegible] கூட்டணி வேலைத்திட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை. நீதிமன்ற அலுவல்கள் தற்

செக்கோஸ்லாவக்கியாவில்

## வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையே கிடையாதாம்

### யாழ்ப்பாணம் வந்த செக். பிரமுகர் கூறுகிறுர்

யாழ்ப்பாணம், புதன்

"செக்கோஸ்லவாக்கிய நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னையே கிடையாது. மாணவர்கள் தங்களுக்கு ஏற்றவேலையை தெரிவுசெய்ய உரிமையுண்டு கல்லூரியில் மாணவன் எத்துறையில் திறமைசாலியாக இருக்கின்றுனே அத்துறையில் வேலைபெற எங்கள் நாட்டில் வாய்ப்புண்டு வேலைவழங்குவதில் எவ்வித [illegible] முதல் தடவை என்றுர்.

'தமிழில் புதுமையான கருத்துக்கள் ஏதாவது கண்டிருகிறீர்களா? என்றதும் பக்தி இலக்கியத்தை கண்டிருக்கின்றேன் என்றுர்.

திருவாசகம், படித்திருப்பதாக கூறியஅவர் தேவாரங்களும் படித்ததாகச்சொன்னுர்.

பக்தி இலக்கியத்தை விளக்கி கூறுவீர்களா? என்றதும் தமிழும் சைவமும் ஒன்றெ [illegible] சோஷலிச பாதையில் முன்னேறுகிறதென்பதை காட்டுகிறது.

பிச்சைக்காரர்களை எமது நாட்டில் காணவே முடியாது, ஒரு சிலர் பணத்தை செலவு செய்த பின் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டாலும் அவர்கள் பிச்சைஎடுப்பதில்லை. தங்கள் நிலைமையைக் கூறி வேறுவிதமாக உதவிகள் பெற்றுக் கொள் [illegible]

## விலைநிர்ணயம்பற்றியகூட்டத்தில் துரைராசசிங்கம்எழுப்பிய கேள்வி

மாவிட்டபுரம், செவ்.

'சுருட்டுத் தொழிலாளரின் சம்பள உயர்வு பற்றிய அறிக்கை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டுமே இடம்பெற்றுள்ளன. இவ்வறிக்கை தமிழிலும் ஏன் இடம்பெறவில்லை,

சுருட்டுத் தொழிலாளர் பிரச்னை பற்றிய கூட்டமொன்றில் உரையாற்றிய சுருட்டுத் தொழிலாளர்சங்கத் தலைவரும் யாழ் மாநகரசபை உதவி மேயருமான திரு ஆ, துரைராஜசிங்கம் இவ்வாறு கேட்டார்.

சுருட்டின் விலையை 15 ரூபாவாக உயர்த்துவதற் [illegible] சட்டம் இயற்று [illegible] யாழ்ப்பாணம் தொழிற் காரியாலயத்தில் உதவிக் [illegible]

சுருட்டுத் தொழிலாளரின் சம்பள உயர்வு பற்றிய அறிக்கையில் தமது சம்பள விபரம் பற்றி அவர்கள் அறிய முடியாமல் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மட்டும் அவ்விபரங்கள் இடம் பெற்றுள்ளன, தமிழ் சுருட்டுத் தொழிலாளர் கூடுதலாக இருக்கும்போது தமிழில் அறிக்கைகள் இடம் பெருதது வேதனைக்குரியது' என திரு துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

தொழிலாளர் பிரதிநிதிகளாக ஆ. துரைராஜசிங்கம் கே. பொன்னுத்துரை, செல்லையா ஆகியோரும் உற்பத்தியாளர் பிரதிநிதிகளாக ரி. [illegible], எம். பரமானந்தம், பி. எஸ். செல்லத்துரை தம்பி ஆகியோரும் கலந்து [illegible]

## கம்போடியாவில் போட்டியரசு

### சிகானு நிறுவினுர்

பீக்கிங், மே 5

கம்போடிய அதிபர் பதவியிலிருந்து நீக்கப்பட்ட இளவரசர் சிகானுக் பீக்கிங்கில் இருந்து கொண்டு போட்டி அரசொன்றை நிறுவியுள்ளார். இப்பொழுது பீக்கிங்கில் தங்கியிருக்கும் இளவரசர் திரு. சிகானுக் புதிய அரசுக்கு கம்போடிய முன்னுள் பிரதமர் போட்டியரசின் புதிய தலைவராக [illegible] அறிவித்தார்.

### உறவு முறிந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையில் திறமைசாலியாக இருக்கின்றனே அத்துறையில் வேலைபெற எங்கள் நாட்டில் வாய்ப்புண்டு வேலைவழங்குவதில் எவ்வித பாகுபாடும்காட்டுவதில்லை''

யாழ்ப்பாணம் வந்திருந்த செக்கோஸ்லாவாக்கிய நாட்டு தமிழ் அறிஞரான திரு. ஜான்பிலிக்ஸ்கி நமது நிருபருக்கு அளித்த பேட்டியின்போது மேற்கண்டவாறு கூறினர்

பேட்டி அளிக்க வந்திருந்த அறிஞர் புன்சிரிப்புடன் தமிழ் மொழியில் பதில் அளித்தார்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளையைச்சந்தித்துபலமணி நேரம் அவருடன் பேசியதாகவும் அவர் தெரிவித்தார்,

இலங்கைக்கு இப்பொழுது தான முதல் தடவையாக விஜயம் செய்தீர்கள் என்று கேட்டபோது இது இரண்டாவது தடவை சென்னையில் தமிழாராட்சி மகாநாடு நடைபெற்றபோது ஒரு தடவைவிஜயம்செய்தேனயாழ்ப்பாணத்திற்கு இது தான்

...ங்களும் படித்ததாகச்சொன்னர்.

பக்தி இலக்கியத்தை விளக்கி கூறுவீர்களா? என்றதும் தமிழும் சைவமும் ஒன்றென்று கூறியிருக்கிறார்கள் என்றார்.

சிலப்பதிகாரம் படித்திருப்பதாகவும் தெரிவித்தார் தனது இலங்கைவிஜயத்தின் மூலம் இந்நாட்டு மக்களுடன் நேரில் தொடர்பு கொண்டு அவர்களை அறிந்திருக்க விரும்பியதாகவும் அவர் தெரிவித்தார்.

தான் மூன்று மாத கால ஆராய்ச்சிக்கு இந்தியா வந்ததாகவும் தன் சொந்த விருப்பத்தின் பேரிலேயே இலங்கைக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:- எங்கள் நாட்டில் எல்லாருக்குமே வேலையுண்டு இலவசகல்வி அளிக்கப்படுகிறது. இலவச வைத்திய வசதியும் எங்கள் நாட்டில் உண்டு. ஆனல் இலங்கையைப்போல் இலவச அரிசி வழங்கப்படுவதில்லை ஒகனல் இலங்கை

நிலைக்குத் தள்ளப்பட்டாலும் அவர்கள் பிச்சைஎடுப்பதில்லை. தங்கள் நிலைமையைக் கூறி வேறுவிதமாக உதவிகள் பெற்றுக் கொள்கின்றார்கள்

'ஈழநாடு' காரியாலயத்திற்கு வந்திருந்த திரு ஜோன்பிலிப்ஸ்கி அன்பாகவும்அமைதியாகவும் தமது இலங்கை விஜயம்பற்றி விரிவாகக் கூறினர்.

வீரபாண்டிய கட்டபொம்மன் பற்றி ஆராய்ச்சி நடத்தும்பொருட்டு இந்தியாவிற்கு வந்திருந்ததாகவும் இந்தியாவின் பல பாகங்களையும் சுற்றிப்பார்த்து அறிஞர்களை சந்தித்ததாகவும் அவர் தெரிவித்தார்.

10 வருடங்களாக தமிழ் மொழி பயின்று வருவதாகவும் தன்னுடன் மற்றுமிருவர் தமிழ் படித்ததாகவும் தெரிவித்தார்.

நயினதீவு, கீரிமலை. காங்கேசன்துறை ஆகிய பகுதிகளுக்கும் சென்றதாகவும் திரு பிலிப்ஸ்கி தெரிவித்தார்.

சுருட்டின் விலையை 15 ரூபாவாக உயர்த்துவதற் சட்டம் இயற்றுவதுகுறித்து யாழ்ப்பாணம் தொழிற் காரியாலயத்தில் உதவிக் கமிஷனர் திரு எஸ் நவரத்தினம் தலைமையில் நேற்று நடைபெற்ற கூட்டத்திலேயே திரு ஆ. துரைராசசிங்கம் இப்படிக் கேட்டார்,

...லையா ஆகியோரும்உற்பத்தியாளர் பிரதிநிதிகளாக ரி. வடிவேலு, எம். பரமானந்தம், பி எஸ். செல்லத்துரை தம்பி ஆகியோரும் கலந்து கொண்டனர், எனினும் நியமன அங்கத்தவர்கள் வராததால் கூட்டம் வேறொரு தினத்துககு ஒத்தி வைககப்படடது.

...யரசின் புதிய தலைவராக ... அறிவித்தார்.

### உறவு முறிந்தது

சீன கம்போடியாவுடனன சகல ராஜதந்திர உறவுகளையும் முறித்து கொண்டது. கம்போடியத் தலைநகரான நாம்பனிலிருந்து சீன தனது தனது ஸ்தானிகராலய அதிகாரிகளைத் திரும்ப அழைத்துக கொண்டது.

...மைகளை ஏற்றுக் கொண்ட... எமக்கு கிடைக்க முடியும் கிடைத்த உரிமைகளும் நீடித்துப் பாது காக்கபபடும்''.

காங்கேசன் துறைத் தொகுதி கம்யூனிஸ்ட் வேட்பாளர் திரு. வ. பொன்னம்பலம் பெரியவிளானில்நடைபெற்ற தமது தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் பேசும் போதுமேற்கண்டவாறுதெரிவித்தார்,

நீதிமன்றங்களில் சிங்களம் ... கூட்டணி வேலைத்திட்டத்தில் தெரிவிக்கப்படவில்லை. நீதிமன்ற அலுவல்கள் தற்போதுள்ள சிங்கள மொழி உத்தியோக அந்தஸ்து நியாயமான அளவு தமிழ் உபயோக விதிகள் ஆகிய இரு சரத்துக்கள் மூலமாகவும் நடத்தப்படும்.

தேர்தல் ஊழியர்

## 80000 பேருக்குப் பயிற்சி வகுப்புகள்

கோட்டை, செவ்வாய் எதிர்வரும் பொதுத்தேர்தல்தினத்தன்று கடமையாற்றத் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு தேர்தல் வேலைகள் பற்றி பயிற்சியளிக்க பயிற்சிவகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளன.

இப்பயிற்சிவகுப்புகள் இம் மாதம் 20-ம் திகதி ஆரம்பமாகும் 80,000 அரசாங்க ஊழியர்கள் பங்கு பற்றும் இப் பயிற்சிவகுப்புகள் தேர்தல் ஆணையாளர் திரு. பீலிக்ஸ்டயஸ் அபேசிங்கி மேற்பார்வையின் கீழ்நடைபெறும். வாக்குச் சீட்டுகளைக் கவனமாகப் பார்வையிடுதல். வாக்காளரோடு நடந்துகொள்ளும் முறையாகியன இப்பயிற்சி வகுப்புகளில் தேர்தல் அதிகாரிகளுக்குச் சொல்லிக்கொடுக்கப்படும்.

தேர்தல் நடைபெறுவதற்கு ஒருநாள் முன்னரே இத் தேர்தல் அதிகாரிகள் தங்களுக்கு கடமையாற்ற அளிக்கப்பட்ட நிலையங்களுக்குச் செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

டேவிஸ் கப் டெனிஸ்

## இந்தியா வெற்றி

புதுடில்லி, மே 5

இந்தியாவுக்கும் அவுஸ்திரேலியாவுக்குமிடையில் இந்தியாவில் நடைபெற்ற, டேவிஸ் கிண்ணத்துக்கான கிழக்குப் பிராந்திய இறுதி டெனிஸ் போட்டியில் இந்தியா வெற்றி வாகை சூடியது.

இந்திய டெனிஸ் ஆட்ட வீரர்களுக்கு பிரதமர் இந்திரா காந்தி தமது விசேஷ பாராட்டுதலை தெரிவித்துக் கொண்டார்.

இந்திய டெனிஸ் கோஷ்டியின் காப்டன் ஆர் கிருஷ்ணனுக்கு, அவுஸ்திரேலிய கோஷ்டியின் காப்டன் பிரேசர் தனது பாராட்டைத் தெரிவித்துள்ளார்.

## "சிறுபான்மைத் தமிழர் உரிமைகளை நிலை நிறுத்த வேணடுமானல்....."

அல்லைப்பிட்டி, செவ். ''தமிழரசுக் கட்சி இனத்தின் விடுதலைக்காக உருவாக்கப்பட்டதொரு கட்சி ஓர் இனம் தனது சுயநிர்ணய உரிமையைநிலைநாட்ட பெரும்பான்மைப் பலத்தோடு இருக்கவேண்டும்'' என சரவணை மேற்கில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய தீவுப்பகுதி வேட்பாளர் திரு கா. பொ இரத்தினம் குறிபபிட்டார்

''நாம் தேர்தலில்போட்டியிடுவது இனத்தின் முன்னேற்றத்திற்காகவும், உரிமைகள்பெறுவதற்காகவுமேயன்றி அற்ப சலுகைகளுக்காகவல்லவென அவர் மேலும் பேசுகையில் கூறினர். வேறு பலரும் பேசினர்.

வேலணை மேற்கில் நடைபெற்ற ஒரு பிரசாரக் கூட்டத்தில் திரு இரத்தினம் பேசுகையில்: இன்று தமிழர்களாகிய நாம் பலதரப்பட்ட பிரச்னைகளை எதிர்நோக்கியுள்ளோம். இப்பிரச்னைகள் தீரவேண்டுமாயின் தமிழர்களின் வாழ்வுக்காகவே அல்லும் பகலும் பாடுபட்டு போராடி வரும் தமிழரசுக்கட்சியையே நாம் ஆதரிக்கவேண்டும்'' எனச் சொன்னர். பள்ளம்புலம் முருகமூர்த்தி கோவில் முன்றலில் கூட்டம் நடைபெற்றது.

''இன்று இங்குள்ள மக்களைப்பார்க்கும்போது இருபதாம் நூற்ருண்டில் தான் வாழ்கின்றர்களா என்னும் சந்தேகம் எழக்கூடியதாகவுள்ளது. இவர்களிடம் நல்ல பண்பிருந்தும் கல்வி அறிவு குறைவாகவிருப்பதையிட்டு நாம் மிகவும் வேதனைப்பட வேண்டியவர்களாகின்றோம்'' என சரவணை முருகன்கோவிலுககு முன்பாகநடைபெற்றகூட்டமொன்றில் பேசும்போது பண்டிதர் இரத்தினம் தெரிவித்தார். திரு ஐயன் தலைமையில் நடைபெற்ற இக கூட்டத்தில் பண்டிதர் மேலும் பேசுகையில் இலங்கைத் தமிழரசுக கட்சியினர் சிறுபான்மைத்தமிழர்களின் பலகுறைகளைத் தீர்கக முயன்றுவருகின்றர்கள் பலபிரச்னைகளைத் தீர்த்துமுள்ளார்கள். சிறுபான்மைத் தமிழர்கள் தங்கள் உரிமைகளை நிலைநிறுத்தவேண்டுமானல் அதற்காகப் பாடுபட்டுவரும் தமிழரசுககட்சியினரையே தெரிவுசெய்து ஆட்சிமன்றத்துககு அனுப்ப வேண்டும்'' என்றார்.

# 49-ல் வந்த சட்டந்தான் சிங்கள சட்டம் நிறைவேறக் காரணம்

—வி. தர்மலிங்கம்

தாவடி, செவ்வாய் ''வருங்காலத் தமிழினம் தன்மானமாக வாழ வழி வகுப்பதாக அமையப்போகின்றது, அண்மையில் நடைபெறவிருக்கும் தேர்தல். 1947-ம் ஆண்டிலே ஆட்சி மன்றத்தில் மொத்தம் 95 அங்கத்தினர்கள் அங்கம் வகித்தபோது 21 தமிழ் எம். பி.க்கள் அங்கம்வகித்தனர். அதன்பின் 1949ல் கொண்டுவரப்பட்ட சட்டத்திணல் தமிழ் எம். பி.க்களின் அங்கத்துவம் அரைவாசியாகக் குறைந்தது. 1956ம் ஆண்டிலே போதிய தமிழ் எம். பி.க்கள் அங்கம் வகிக்காத காரணத்திணலேதான் தனிச்சிங்களச்சட்டம் நிறைவேறக்கூடியதாகவும் இருந்தது''

இவ்வாறு தாவடி பத்திரகாளிகோவிலுக்கு அண்மையில் தேர்தல் பணிமனையைத் திறந்துவைத்துப் பேசும் போது முன்னள் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினர்.

திரு சீ கந்தையாவின் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் திரு தர்மலிங்கம் மேலும் பேசியதாவது: ''தமிழ் மக்களின் நலன் கருதி அந்தரங்க சுத்தியோடும், உண்மையோடும் தமிழரசுக்கட்சி பாடுபட்டு வருகின்றது. தமிழ்நாட்டிலே தமிழுக்குக்கிடைக்காத உரிமை ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களுக்குக்கிடைத்திருக்கின்றதென்பது யாரும் அறிந்ததே. இதனை அண்மையில் இலங்கைக்குவந்த சிலம்புச் செல்வர் திரு ம பொ சி கூட போற்றினர்.

திரு கயிலைநாதன், திரு சித நடராசா, உடுவில் கிராம சபைத்தலைவர் திரு சமுத்திலிங்கம் உட்படப் பலர் உரையாற்றினர்.

## இன்று திறப்புவிழா

யாழ்ப்பாணம், புதன் பழைய கச்சேரியில் அமைந்துள்ள அரசாங்க பொதுச்சேவை தொழிலாளர் சங்க யாழ்ப்பாணக் கிளையை இன்று மாலை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு எவ் ஒ பீற்றர்ஸ் திறந்துவைக்கிருர்.

## மரண அறிவித்தல்

திருமதி அழகம்மா பரம் காலஞ் சென்றுவிட்டார். இவர் காலஞ் சென்ற திரு. எம். எஸ். பரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பரம் தேவராஜா, பரம் சிங்கராஜா, பரம் செல்வராஜா, பரம் தில்லைராஜா, திருமதி சதாசிவம், திருமதி விஜயரத்தினம் திருமதி முதியப்பாபிள்ளை அவர்களின் அன்புத் தாயாரும், திரு. சதாசிவம், திரு. விஜயரத்தினம், திரு. முதியப்பாபிள்ளை, நல்லம்மா காலஞ் சென்ற லியா எஸ்மி ராணி ஆகியோரின் அன்பு மாமியாருமாவர். அன்னரது பூதவுடல் இன்று பி. ப. 4 மணியளவில் 5/1 ஆசுசா லேன், வெள்ளவத்தையிலிருந்து கடத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப் பட்டு நல்லடக்கஞ் செய்யப்படும்.

தகவல்: ஆர். விஜயரத்தினம்.

தேர்தல் தினத்தன்று

## வானெலி நிலையத்தை கடற்படைகாவல் புரியும்

கோட்டை, செவ். பொதுத் தேர்தல் நடைபெறும் தினமான மே 27-ம் திகதியிலிருந்து 29-ம் திகதி வரை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் கடும் பாதுகாப்பு ஒழுங்குகளை காபாந்து அரசாங்கம் மேற்கொள்ள விருக்கிறது.

இதற்காக கடற்படையினர் பயன்படுத்தப்படுவார்கள். இதுகுறித்து உடனடி நடவடிக்கைகள் எடுக்குமாறு கடற்படையின் பதில் தளபதி வி. ஹன்ரகுக்கு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் தினத்திலிருந்து புதிய அரசாங்கம் அமைகப்படும் வரை இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபனத்துகு கடும் பாதுகாப்பு அளிக்கப்படவேண்டுமென இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபன அதிகாரிகள் கேட்டு கொண்டதைத் தொடர்ந்தே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளது.

இதே வேளையில் கூட்டுஸ்தாபனத்துக்குள்ளும் தேர்தல் முடிவுகளை மக்களுககு ஒலிபரப்பும் பொழுது எவரும் எதுவித தீங்கோ தடையோ விளைவிக்காதவாறு இருப்பதற்காக கடற்படையினர் காவல் புரிவர்.

தேர்தல் முடிவுகளை சீட்டுகள் எண்ணி முடிந்தவுடனே அறிந்து கொள்வதற்காக கூட்டுஸ் தாபனத்துக்கும் கச்சேரிகளுக்குமிடையே விசேஷ தொலைபேசித் தொடர்புகளும் ஏற்படுத்த நடவகுக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன தெர்தல் தினத்தன்று முதலாவது தேர்தல் முடிவு இரவு 9-30-ககும் 10 மணிகுமிடையில் ஒலிபரப்பப்படலாம் என மேற்படி கூட்டுஸ்தாபன அதிகாரிகள் நம்புகின்றனர்.

## செக். நோக்கி ரஷ்ய கோஷ்டி

மாஸ்கோ, மே 5

சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் தலைமையிலான உயர் தூதுகோஷ்டி ஒன்று இன்று செக்கோஸ்லவாக்கிய புறப்பட்டுச்சென்றது. அங்கு நட்புறவுஒப்பந்தத்தில் கைச்சாத்திடவே இவர்கள் சென்றனர்.

## 'மந்திரி பதவிக்காக பிரிந்து சென்றர்களாம்

மாவிட்டபுரம், செவ். 'இந் நாட்டில் ஒரே சமூகத்தவர் போன்று தமிழர் சிங்களவர்கள் வேற்றுமையற்று வாழ்ந்தோம். அப்போது சமய அனுஷ்டானங்களும் காப்பாற்றப்பட்டது.

திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தமிழர் நலன்கருதி உருவாக்கிய தமிழ்காங்கிரஸ் கட்சியிலிருந்து தமகு மந்திரிப்பதவி கிடைக்காத காரணத்தால் திரு செல்வநாயகம் கோஷ்டியினர் பிரிந்து தமக்கென ஓர் அரசியல் கட்சியை தோற்றுவித்து ஒன்ருக இருந்த சமூதாயத்தை இரண்டாகப் பிரித்ததுமல்லாமல் இரு இனங்களுக்கிடையேவகுப்புவாத உணர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அக் கட்சியை வளர்ததுள்ளார்கள்.'

இவ்வாறு காங்கேசன் துறைத் தொகுதி வேட்பாளர் திரு செ. சுந்தரலிங்கத்தை ஆதரித்து மாரியங்கூடல் முருகமூர்த்திகோவில் முன்றலில் திரு சு. கந்தப்பு தலைமையில் நடந்த மாபெரும் கூட்டத்தில் உரையாற்றிய சைவ அனுட்டான பாதுகாப்புச் சபைத் தலைவர் திரு த. சிவலிங்கம் கூறினர்,

அவர் தொடர்ந்து பேசுகையில்,

இத் தமிழரசுக் கட்சியினர் தமது தன்னலங்களை தடைசெய்யும் தலைவர்களையும் வெளியேற்றி தமிழர்கள் மத்தியில் மீண்டும் பிரிவினையை ஏற்படுத்தினர்கள்.இப்போது கிறிஸ்தவர்களையும் இந்துக்களையும் எதிரிகளாக்கி வேடிக்கை பார்க்கிருர்கள்,

எனவே பிரித்தாளும் தந்திரத்தால் தத்தம் காரியங்களை வெற்றிகரமாக முடிககும் தமிழரசாரை ஒதுக்கி மீண்டும் ஒருகுடைக்கீழ்தமிழர்கள் ஒற்றுமைப்படவேண்டுமாயின் திரு சுந்தரலிங்கம் போன்ற தலைவர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பவேண்டும் என்றர்.

மற்றும் திரு மு, திடவீரசிங்கம் திரு க. கதிரமலையான் சு,து, சண்முகநாதக் குருக்கள் உட்படப் பலர் உரையாற்றினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

யாழ். மேயரும் எமது பழைய மாணவருமாகிய திரு. ரி. எஸ். துரைராசா அவர்களைக் கௌரவிப்பதற்காக 10-5-70 ஞாயிற்றுக்கிழமை மாலை கல்லூரியில் ஓர் தேநீர்விருந்து நடைபெறும் இதில் கலந்து கொள்ள விரும்பும் பழைய மாணவர்கள் எம்முடன் தொடர்பு கொள்க.

யா. இ. க
5-5-70.

வை. ச. செந்தில்நாதன்,
செயலாளர்.

2110



## தேவை

### யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாண வங்கி எழுதுவினைஞர் (தரம் 2)

**வயது:** 23 — 27 (15-5-70-ல்)

**தகைமை:** சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது கல்விப் பொதுத் தராதரப்பத்திரம் (சாதாரணம்) பரீட்சையில் ஒரே முறையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவற்றில் 5 பாடங்களில் விசேட சித்தியடைந்திருத்தல் வேண்டும். இவ்விசேட சித்திகளில்எண் கணிதம் அல்லது தூயகணிதம், தமிழ், ஒரு விஞ்ஞானபாடம் அல்லது குடியியல் அல்லது சரித்திரம் ஆகியன உள்ளடங்கியிருத்தல் வேண்டும். ஐந்து விசேட சித்திகளில் ஒன்று பின்பும் பெற்றிருக்கலாம். விண்ணப்பகாரர் ஆங்கில மொழிப் பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். கூட்டுறவுப் பயிற்சியில் சித்தி ஒரு கூடிய தகைமையாகக் கருதப்படும்.

**சம்பளம்:** ரூபா 106/- — 290/-
6/-X18; 7/-X4; 8/-X1; 10/-X4.

மாதச் சம்பளத்துடன் வங்கியினால் அளிக்கப்படும் படிகளும் வழங்கப்படும்.

**பிணைப்பணம்:** ரூபா 1000/- ரொக்கம்.

**தகுதிகாண் காலம்** ஒரு வருடம். இக்காலத்திற்குள் வங்கியால் நடாத்தப்படும் தட்டச்சுப் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்பட்டோர் குறைந்தது இரண்டு வருட காலமாவது சேவை செய்ய உத்தரவாதப் பத்திரமளிக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் (பிறப்பு, கல்வித் தகைமை, சமீபத்தில் பெற்ற இரு நற்சான்று ஆகிய இதழ்களின் பிரதிகளுடன்) 15-5-70-ல் அல்லது அதற்கு முன் கிடைக்கும்வண்ணம் பதிவுத் தபாலில் கௌரவ காரியதரிசிக்கு அனுப்ப வேண்டும். கடித உறையில் இடதுபக்க மூலையில் 'எழுதுவினைஞர் தரம் 2' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

59, பிரதானவீதி,
யாழ்ப்பாணம்.

கௌரவகாரியதரிசி,
யாழ்ப்பாணம் கூட்டுறவு மாகாணவங்கி

2247



ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள் 63வதுநாள் சிவாஜி ஜி. வரலக்ஷ்மி - நம்பியார் நடித்த

ஹரிச்சந்திரா


# கால்நடைச் செல்வங்களைக் காப்பாற்றுங்கள்!

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சியில் விவசாயத்துக்கு பெரும் உதவியாக இருந்துவந்த கால்நடைகள் சமீபகாலத்தில் மிகக் குறைந்துள்ளதாகத் தெரியவருகிறது.

நவீனவகையான இயந்திரக் கருவிகளை விவசாயிகள் கையாண்டுவருவதனாலேயே கால்நடைகளின் எண்ணிக்கை குறைவதற்கு அடிப்படைக் காரணம் என்று விவசாயிகளிற் சிலர் தெரிவிக்கின்றனர்.

கால்நடைகளின் வசதிக்காக அரசாங்கம் வழங்கியுள்ள மேய்ச்சற் காணிகள் பல அபிவிருத்திசெய்யப்படாமலேயுள்ளனவென்றும் அறியப்படுகிறது.

குடியேற்ற வாசிகளின் தேவைக்காக வீட்டில்வளர்க்கின்ற ஆடுமாடுகளின் தொகை கூட அருகிவிட்டதாகவும் இவற்றை இறைச்சிக்காக தனிப்பட்ட வியாபாரிகளுக்கு விற்றுவிடுகின்ற வழக்கம் அதிகரித்தும் வருகின்றது.

பெரிய பரந்தனுக்கு அண்மையிலுள்ள வாரிச்செட்டிமடம் என்ற மேச்சற்றரையில் விடப்பட்ட கால்நடைகள் பல காணமற் போய்விட்டதாகவும் குஞ்சர் தாமோதரம்பிள்ளை என்ற விவசாயி பொலிசில் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிகிறது.

கால்நடைச் செல்வங்களை பேணிப் பெருககவேண்டுமென்ற வேண்டுகோளை பொறிக்கடவையில் கூட்டுறவுச்சங்கங்கள் நடத்திய பொதுக்கூட்டத்தில் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

## கலைநகர் வெற்றி

சித்தன்கேணி, செவ்வாய்

சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்திற்கும் இணுவில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் சித்தன்கேணி கலைநகர் நேருஜி சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் இரண்டு ஆட்டங்களையும் பெற்று மகத்தான வெற்றியீட்டியது. வெற்றியீட்டிய கழக விளையாட்டு வீரர்களாகப் பின்வருவோர் பங்கு பற்றினர். திரு. சீ. செந்தூர்ராசா, திரு. மு. துரைராசா, செல்வன் க. பஞ்சநாதன், செல்வன் த கணேசன், செல்வன் மு. நல்லசேகரம்பிள்ளை, ஆசிரியர் திரு. நா. க. தங்கரத்தினம். மேற்படி போட்டி இணுவில் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 6—5—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்

# எச்சரிக்கை

## இ-போ-ச சாரதிகளுக்கு!

வடபகுதி பொலிசாரது கவனம் இப்போது இலங்கைப் போக்குவரத்துச்சபை பஸ் சாரதிகள் மீதுதிரும்பியுள்ளது! வீதிகளில் பஸ்களை போக்குவரத்து சட்டத்துக்குமுரணாகவும் கவனயீனமாகவும் ஓட்டுவதாக பொலிசாரது கவனத்துக்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்தே பொலிசார் தமது பார்வையை இவர்கள் பக்கம் திருப்பியுள்ளனர்.

கடந்த ஐந்து மாதத்துக்குள் யாழ்ப்பாண நகர எல்லைக்குள் பதினொரு இ.போ.ச. பஸ்கள் விபத்துக்குள்ளாகியிருப்பதாக வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலய புள்ளி அறிக்கையொன்று தெரிவிக்கிறது. இதனைச் சுட்டிக் காட்டிய வடபகுதி உயர் பொலிஸ் அதிகாரியொருவர் இ போ. ச. பஸ் சாரதிகளின் கவனக் குறைவே இப்படியான விபத்துக்கள் நடப்பதற்கு காரணம் என்றும் குற்றஞ் சாட்டினார்.

வீதிகளில் பஸ்கள் தவிர மற்றும் எத்தனையோ வாகனங்கள் பாதசாரிகள் போக்குவரத்துச் செய்கிறார்கள் என்பதை இ. போ. ச பஸ் சாரதிகள் மறந்துவிடுகிறார்களோ என்னவோ என்று பொது விஷயத்தில் அக்கறையுள்ள ஒரு சமூக சேவையாளர் கவலை தெரிவிக்கிறார்.

இ. போ. ச. பஸ் சாரதிகள் எவ்வளவு தூரம் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் பஸ்களை ஓட்டுகிறார்

போக்குவரத்துச் சட்டத்துக்கும் வீதிப் பாதுகாப்புக்கும் முரணாக பஸ் ஓட்டுபவர்கள் மீது வடபகுதிப் பொலிசார் எந் நேரத்திலும் நடவடிக்கை எடுக்கத் தயங்க மாட்டார்கள்.

வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டன்ட் திரு ஆர். சுந்தரலிங்கம் எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைப்பற்றி சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விபரமான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார்.

—நமதுநிருபர்

மென்பந்தாட்டம்

## லெலின் ஸ்டார் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் இளங்சிங்க சனசமூகநிலையத்தினால் நடாத்தப்பட்டு வரும் மென்பந்துக்கிரிக்கெட் சுற்றுப்போட்டியில், யாழ்ப்பாணம் "லெலின் ஸ்டார்" கழகம் யாழ்ப்பாணம் கென்னடி கழத்தை வெற்றி பெற்றது.

கென்னடிக்கழகம் முதல் இன்னிங்ஸில் மொத்தம் 11 ஓட்டங்களையும், 2 வது இன்னிங்ஸில் மொத்தம் 51 ஓட்டங்களையும் பெற்றது. லெலின் ஸ்டார் கழகம், முதல் இன்னிங்ஸில் 37 ஓட்டங்களையும். 2 வதுஇன்னிங்ஸில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட இறுதியில் கென்னடிக் கழகத்தை ஆறு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

# "சோஷலிஸ அடிப்படை அரசே பொருளாதாரப் பிரச்னையைத் தீர்க்கும்"

## கம்யூனிஸ்ட் செயற்கமிட்டி உறுப்பினர் கருத்து

உடுப்பிட்டி, செவ்.

"இன்று கொண்டாடப்படும் மேதினத்தின் முக்கியத்துவம் பலருக்கும் தெரியும். 1956ம் ஆண்டிற்குப் பின் பண்டாரநாயக்கா அரசாங்கம் இத்தினத்தைத் தொழிலாளர் தினமாக விடுமுறை வழங்கியது. 1970ம் ஆண்டு கொண்டாடப்படும் இம்மேதினம் தேர்தலுடன் வந்துள்ளதால் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது.

சென்ற காலங்களில் நாம் என்ன செய்தோம் என்று கூறிக்கொள்வதைவிட இனிமேல் என்ன சாதிக்கலாம் எனச் சிந்திக்கவேண்டியது அவசியம். ஏனெனில் நாம் அரசியலில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளோம். பொதுமக்களுக்கு இருக்கும் பிரச்னைகள் சுலபமானவைகளானபடியால் தீர்ப்பும் இலகுவானதாக இருக்கும் ஆனால் தமிழ்மக்களின் பிரச்னை அப்படியல்ல.

தென்னிலங்கையில் சிங்கள சக்திகள் இரு பிரிவுகளாகப் பிரிந்துவிட்டன. ஆர். ஜீ. சேனநாயக்காவின் கட்சியைத் தவிர்ந்த ஏனைய கட்சிகள் பிரிந்துபோய்விட்டன. ஆர். ஜீ.க்கு எந்த அரசாங்கத்திலும் இடம்கிடையாது. வலதுசாரிகள், முதலாளிகள், வகுப்புவாதிகள், பிற்போக்குவாதிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்துள்ளனர்."

இவ்வாறு கம்யூனிஸ்ட்கட்சிச் செயற்கமிட்டிச் செயலாளர் திரு. இரத்னவீரா உடுப்பிட்டியில் நடைபெற்ற மேதின விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். அல்வாய் மாலிசந்திப் பிள்ளையார்கோவில் முன்றலில் நடைபெற்ற மேதின விழாவுக்கு அட்வகேட் திரு. எஸ். ஜெயகசிங்கம் தலைமைதாங்கினார். இக்கூட்டத்தில் திரு. இரத்தினவீரா பேசும்போது மேலும் தெரிவித்தது வருமாறு:

"மற்றப் பக்கத்திமபொதுமக்களின் நன்லையைக் கருதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட்கட்சி ஆகியவை இணைந்துள்ளன. ஆனபடியால் தென்னிலங்கை வாக்காளர்களின் தீர்ப்பு சுலபமானது. வலதுசாரிகளுக்கா, இடதுசாரிகளுக்கா தமது வாக்குகள் எனத் தீர்மானித்துக்கொள்வர்.

துடனும் அனுப்பினாலும் தமிழரசை உண்டாக்கமுடியாது. தென்னிலங்கையில் பலம் வாய்ந்த சிங்களக் கட்சிகளுடன் சேர்ந்துவிட்டுத் தேர்தல் நெருங்கிதும் விலகுவது தமிழரசுக்கட்சியினரின் வழக்கம் எதிர்காலத்திலும் இப்படித்தான் நடப்பார்கள்.

திரு. பொன்னம்பலம் டட்லி கட்சியில் ஒரு பிழையும் இல்லையென்று கூறுவார். தமிழ்க்காங்கிரஸ் கட்சி, யு. என். பி.யின் யாழ்ப்பாணக் கிளை என்று கூறலாம். ஓர் அரசியல் கட்சி நிலை எப்பொழுதும் ஒரேமாதிரி இராது, மாறிக் கொண்டேயிருக்கும். சமுதாயத்தில் மாற்றம் ஏற்படும் போது கட்சிகளின் கொள்கைகளும், அரசியல் சூழ்நிலையும் மாறும். அரசியல் சூழ்நிலையைப் பொறுத்து கொள்கையை மாற்ருவிடில் கட்சி அழிந்துபோகும்.

இதனால் பல கட்சிகள் அனுபவம் மூலம் புத்தி பெற்றுள்ளன. பொது மக்களுக்கு இப்போது முன்னேறும் வழி எங்கே இருக்கிறதென்று தெரிகின்றது. 1965ம்ஆண்டுத் தேர்தலின் பின் செல்வநாயகம் உதவி கொடுக்காவிட்டால் டட்லி ஆட்சி அமைத்திருக்கமுடியாது. 7 கட்சிகள் கூட்டுச் சேர்ந்ததைத் தேசிய ஒற்றுமை என்று சில பத்திரிகைகள் புகழ்ந்தன. ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக வகுப்புவாதம் பேசிய டட்லிதான் தேசிய ஒற்றுமை பற்றி வலியுறுத்தினார்.

மொழிப் பிரச்னைக்கு ஒரு தீர்வு காணுமுகமாக வட்ட மேசை மகாநாடு கூட்டப் போவதாகவும், பல கட்சிகளையும் அழைக்கப்போவதாகவும் பிரதமர் டட்லி சொன்னபோது நான் நல்ல யோசனையென்று வரவேற்றேன். தேர்தல் முடிந்ததும் டட்லி இந்த யோசனையை மறந்துவிட்டார் போலும். இரகசிய ஒப்பந்தம் பற்றி நாம் விளக்கம் கேட்கும்போது நாம் வகுப்புவாதத்தைக் கிளப்புவதாக டட்லி எம்மீது குற்றஞ் சாட்டுகிறார். அடுத்த அரசாங்கத்தை ஸ்ரீமா அமைக்கப்போவது நிச்சயமாகிவிட்டது.

நாட்டில் இனப் பிரச்னைகளைக் கிளப்பும் பிற்போக்கு

தெரிவிக்கப் பட்டிருக்கிறது. மகாவலிகங்கைத் திட்டம் பூர்த்தியடைந்ததும் வேலையில்லாத்திண்டாட்டத்தைத் தீர்க்குமென்று டட்லி கூறுகிறார். இன்னும் முப்பது ஆண்டுகளில் இப்பொழுது வேலையற்றிருக்கும் வாலிபன் இளைப்பாறும் வயதை அல்லாவா அடைந்துவிடுவான்.

(4-ம்பக்கம்பார்க்க]


## வரி விளம்பரம்

### இலவசம்

"யோகக்கலை" என்னும் அரிய நூல் தேவையானவர்கள் 10 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற் சோப் தொழிற்சாலை, யாழ்ப்பாணம். 2118

### விற்பனைக்கு

35 பரப்பு தோட்டக் காணி வற்ருக்கிணறு உரும்பராய் வடக்கு புறக்டர் தனபாலசிங்கத்தை சந்திக்கவும். 2203

### தேவை

தாதிமாராகப் பயிற்றுவிப்பதற்கு கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தியடைந்த பெண்கள் தேவை. ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருத்தல் அவசியம். 20-5-70 திகதிக்கு முன்னர் சொந்தக் கையெழுத்தில் ஆங்கிலத்தில் விண்ணப்பிக்கவும். தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய், சுழிபுரம். 2115

பிஸ்கற், பாண் தயாரிக்கத் தெரிந்த அனுபவமுள்ளவர்கள் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். வேல்ஸ் பேக்கரி, முரசுமோட்டை, பரந்தன். 2204

### வகுப்புக்கள்

'பாமசிஸ்ற்' பரீட்சைக்கு (External Pharmacist Examination) வகுப்புகள் நடைபெறுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

ராஜா 63வதுநாள் சிவாஜி

(யாழ்ப்பாணம்) ஜி.வரலக்ஷ்மி - நம்பியார்

தினசரி 3 காட்சிகள் நடித்த

# ஹரிச்சந்திரா

ராணி சிவாஜி, கே ஆர் விஜயா

(யாழ்ப்பாணம்) நாகேஷ்-பாலாஜி-பேபி ராணி

தினசரி 3 காட்சிகள் நடித்த

# திருடன்

வின்ஸர் யாழ்ப்பாணம் தினசரி 4 காட்சிகள்

சிவாஜிகணேசன் — பாரதி

மற்றும் பலர் நடித்த

# தங்கச் சுரங்கம்

(முழுநீள ஈஸ்ட்மன் கலர் சித்திரம்)

மகத்தான 84-வது தினம்

# வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி.

(போயா, பிரிப்போயா காலை 10-30)

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய

ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற

வெற்றிச்சித்திரம்



சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா, நாகேஷ், நம்பியார்

மற்றும் பலர் நடித்த

# தில்லானா மோகனாம்பாள்

வெற்றிகரமான 2வது வாரம்!

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

எம். ஜி. ஆர். - ஜெயலலிதா

ரங்கராவ், பேபி பத்மினி, நாகேஷ்

இன்னும் பலர் நடித்த

பி. நாகிரெட்டி அளிக்கும்

# நம் நாடு

(ஈஸ்ட்மென் கலர்


காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச்சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச்சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5 00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு6-10இசைப்பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கிராமசஞ்சிகை, 7-15 பாட்டு, 7-45 செய்தித்திரட்டு, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.


## வெஸ்லிசினிமா

மானிப்பாய்

தினசரி: 6-30, 10-00

பிரிபோயா, போயா 2-30மணி

ஜெமினி கணேசன், கே. ஆர். விஜயா நடித்த

### ராமு

## ஸ்ரீ காலிங்கன்

இணுவில்

தினசரி 6-30-10-00 மணி

போயா, பிரிபோயா 2-30

ஜெமினி கணேசன் நடித்த

### எல்லோரும் இந்நாட்டு மன்னர்

REGAL JAFFNA

Daily

4-45, 7 & 9-45 p.m.

Pre poya, Poya 10-30 A.M

George Peppard & Gayle Hunnicut in

P. J.

(Adults only)

MANOHARA JAFFNA

Daily 4-45, 7&9-45 p.m

Prepoya, Poya 4 shows

Clint East wood & Susan Clark in

COOGAN'S BLUFF

(Adults only)


சேவையாளர் கவலை தெரிவிக்கிறார்,

இ.போ.ச. பஸ் சாரதிகள் எவ்வளவு தூரம் கவனமாகவும் எச்சரிக்கையாகவும் பஸ்களை ஓட்டுகிறார்களோ அவ்வளவு தூரத்துக்கு விபத்துக்கள் நடைபெறுமலிருக்க உதவியாக இருக்கும் என்பதை பஸ் சாரதி ஒருவரே ஒப்புக்கொள்கிறார்.

உதாரணமாக 1967-ம் ஆண்டு உடுப்பிட்டிக்கு சமீபத்தில் உள்ள வல்லைச்சந்தியில் நடந்த இ. போ. ச. பஸ் கார் ஒன்றுடன் மோதுண்டதால் ஏற்பட்ட மூன்றுகொலைகள் பயங்கரமான ஒரு நினைவை ஏற்படுத்துவதுடன் பலத்த எச்சரிக்கையையும் இ. போ. ச பஸ் சாரதிகளுக்கு உணர்த்துகிறது,

காரொன்றில் வந்து கொண்டிருந்த டாக்டர் அடுத்த சில தினங்களில் புது வாழ்வுகாண இருந்த மணமகன் மற்றொருவர் இ. போ ச, பஸ் ஒன்றின் தாக்குதலுக்கு இரையாகி ஸ்தலத்திலேயே துடிதுடித்து மாண்டது நெஞ்சத்தில் நினைவாக இப்போதும் உள்ளது.

வல்லையில் நடந்த கோர விபத்தில் இ, போ.ச. சாரதி மீது தவறெனக் கூறி நீதிமன்றம் அவருக்கு சிறைத் தண்டனையும் விதித்தது.

இப்படியான கோரச்சம்பவங்களை இ. போ, ச, பஸ் சாரதிகள் நினைவில் வைத்துக்கொள்வது நல்லது.

தாம் எப்படியான புனிதமான தொழிலைச் செய்கிறோம் என்பதை மனதில் கொண்டு சேவையாற்ற வேண்டும்.

இ.போ.ச. சாரதிகள் எல்லார்மீதும் பொலிசார் குற்றஞ்சாட்டுவதாக எண்ணி விடக்கூடாது, ஆயினும்இது சாரதிகள் எல்லாரும் எச்சரிக்கையாக பஸ்களை ஓட்ட வேண்டுமென்பதில் பொலிசார் அக்கறையுள்ளவர்களாக இருக்கின்றனர்.

கிரிக்கெட்

## கரவெட்டிக்கு வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய் கரணவாய் தெற்கு கிரிக்கெட் கழகத்திற்கும், பொலிகண்டி கிரிக்கெட் கழகத்திற்குமிடையே பொலிகண்டி மைதானத்தில் நடைபெற்ற 18 வயதுக்குட்பட்டவர்களுக்கான கிரிக்கெட் ஆட்டத்தில் கரணவாய் கோஷ்டி பொலிகண்டியை 30 ஓட்டங்களால் வென்றது. திருவாளர்கள் நந்தகுமார், குலேந்திரம் ஆகியோர் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர்.

த்துக்கு 26 ஓட்டங்களைப் பெற்று ஆட்ட இறுதியில் கென்னடிக் கழகத்தை ஆறு அதிகப்படியான விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இப்போட்டி யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் மைதானத்தில் நடைபெற்றது. (தே.நி)

## சிவன் சிறுருக்கு வெற்றி

சித்தன்கேணி, செவ்வாய் வட்டுக்கோட்டை சிவன் கோவிலடி சிவன்சிறுர் மன்றத்துக்கும் வட்டுக்கோட்டை அண்ணா கழகத்துக்குமுடையே நடந்த கிரிக்கெட் மோதலில் அண்ணா கழகத்தை சிவன் சிறுர் மன்றம் 3 ஓட்டத்தினாலும் 7 அதிகப்படியான விக்கட்டினாலும் வெற்றியீட்டியது.

அண்ணா கழகம் முதலாவது ஆட்டத்தில் 79 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 28 ஓட்டங்களையும் பெற்றது. சிவன்சிறுர் மன்றம் முதலாவது ஆட்டத்தில் 72 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 4 விக்கட்டுகளை இழந்து 38 ஓட்டங்களையும் பெற்றது. வட்டுச்சிவன் இந்து சமய அபிவிருத்திச்சங்க விளையாட்டு மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு மத்தியஸ்தராக திரு. தர்மபாலன் கடமையாற்றினர்.

கரபந்தாட்டம்

## தம்பாட்டி சாம்பியனானது

யாழ்ப்பாணம், புதன் ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் கழக கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் தம்பாட்டி காந்திஜி சனசமூக நிலைய 'பி' பிரிவு சாம்பியனுக்குரிய வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது,

இவ்வாண்டில் தீவுப்பகுதியில் ஏற்கனவே நடைபெற்ற கரபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இக்கோஷ்டியினரே சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

## கிளை திறக்கப்பட்டது

கோப்பாய்: செவ்.

இலங்கைத்தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் கோப்பாய் வடக்குக்கிளைக் காரியாலயம் கோப்பாய் சந்திக்கருகாமையில் திறந்து வைக்கப்பட்டது.

கோப்பாய் கிராமசபைத் தலைவர் தலைமையில் திரு. குமார் பொன்னம்பலம் மேற்படி காரியாலயத்தைத் திறந்துவைத்தார்.

னிலங்கை வாக்காளர்களின் தீர்ப்பு சுலபமானது. வலதுசாரிகளுக்கா, இடதுசாரிகளுக்கா தமது வாக்குகள் எனத் தீர்மானித்துக்கொள்வர். ஆனால் தமிழ்ப்பகுதிகளில் வெவ்வேறு கட்சிகள் போட்டியிடுவதால் வாக்காளர்கள் பாடு கஷ்டமாக உள்ளது.

தமிழில் தமிழரசுக்கட்சி, ஆங்கிலத்தில் சமஷ்டிக் கட்சி. இதுதான் இக்கட்சியின் உண்மை வித்தியாசம். ஒருபோதும் இலங்கையில் தமிழரசு ஏற்படமுடியாது. வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழரசுக்கட்சியை எத்தகைய கூடுதல் பலத்

சாங்கத்தை ஸ்ரீமா அமைக்கப்போவது நிச்சயமாகிவிட்டது.

நாட்டில் இனப் பிரச்னைகளைக் கிளப்பும் பிற்போக்குவாதிகளே அதனால் கஷ்டமடைவர். டட்லி மகாவலி கங்கைத் திட்டத்தின் முழு உண்மையையும் சொல்லவில்லை. அவர் அரைவாசி உண்மையையே சொல்லியுள்ளார். மகாவலி கங்கை திட்டம் ஒரு நல்ல திட்டம். ஆனால் முழு உண்மையும் எமக்குத் தெரியவேண்டும்.

மத்திய வங்கியின் அறிக்கைப்படி இலங்கையில் ஏழரை லட்சம் மக்கள் வேலையின்றி இருப்பதாகத்


'பாமசிஸ்ற்' பரீட்சைக்கு (External Pharmacist Examination) வகுப்புகள் நடைபெறுகின்றன. உடன் விண்ணப்பிக்கவும். விக்னேஸ்வரன், 7, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 2119

WANTED

Wanted for Co-operative Hospital, Moolai, Chulipuram Laboratory Technologists. Salary according to qualification and experience. Please apply to President with full particulars. Closing date 20th May, 1970. 2116

தமிழ், ஆங்கில மொழிகளில்

# அச்சு வேலை எதுவானாலும்

எங்களையும் விசாரியுங்கள்

எமது வர்த்தக அச்சகப் பகுதியில்

- கடிதத் தலைப்புகள்
- அறிமுக அட்டைகள்
- பெரிய சிறிய பிரசுரங்கள் — பிரசுரித்தல்
- புத்தகம் கட்டுதல்
- புதிய வகைப் பற்றுச்சீட்டுப் புத்தகம்
- பெரிய பதிவுப் புத்தகம்
- கோடடித்தல்

ஆதியன

குறைந்த கட்டணத்தில் அனுபவமும் திறமையும் வாய்ந்த ஊழியர்கள் திருப்தியான வேலை செய்கிறார்கள்.

சிறந்த சேவையே எமது நோக்கம்

# ஈழநாடு (வர்த்தக அச்சகப் பகுதி)

தொலைபேசி: 389 த. பெ. எண்: 49,

63, சிவன்கோவில் மேற்கு வீதி,

யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தோசீன நெருக்கடி

# "அமைதிச் சூழ்நிலையை அமெரிக்க நடவடிக்கை கெடுத்து விட்டது"

## சோவியத் பிரதமர் கொஸிஜின் கண்டனம்

### ஜெனிவா மாநாட்டுக்கு இது தருணமல்ல என்கிறார்

### வட வியட்னமுக்கு மேலும் ஆயுத உதவி கிடைக்கும்

மாஸ்கோ, மே 5

உலக நாடுகளுக்கிடையிலான பிரச்னைகளைத் தீர்த்துக்கொள்வதற்குச் சாதகமாக உருவாகிவந்த கீழ்நிலையை அமெரிக்க நடவடிக்கைகள் சிக்கலுக்குள்ளாக்கிவிட்டதாக சோவியத் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜின் குற்றஞ்சாட்டியிருக்கின்றார்.

கம்போடியாவுக்குள்புகுந்துவடவியட்னும்மீதுகுண்டுவீசத்தொடங்கியிருப்பதின் காரணமாக வட வியட்னமுக்கு சோவியத் யூனின் வழங்கி வரும் ஆயுத உதவிகள் சம்பந்தமாக மறு பரிசீலனை செய்யப்படுமென்றும் திரு. கொஸிஜின் கூறியிருக்கிறார்.

கம்போடியா பிரச்னை சம்பந்தமாக ஜெனிவா மாநாடு போன்ற ஒரு சமாதான மாநாட்டைக் கூட்டவேண்டும் என்று அமெரிக்கா கருத்து வெளியிட்டிருக்கின்றது.

கம்போடியாவுக்குள் அமெரிக்கத் துருப்புகள் புகுந்திருப்பதை எதிர்த்து அமெரிக்காவில் பல நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. ஒஹியோ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது 4 மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

கம்போடியா சம்பந்தமாக அமெரிக்கா எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அமெரிக்காவிலும் இதர நாடுகளிலும் பெருமளவில் எதிர்ப்புக்கள் ஏற்பட்டிருந்த போதிலும் கம்போடியா அரசின் புதிய தலைவர் ஜெனரல் லொங் நொல் அமெரிக்க அரசாங்கத்திற்கு நன்றி தெரிவித்திருக்கிறார்.

தேசங்களுக்கிடையிலான பிரச்னைகளை அமைதியான முறையில் தீர்த்துக்கொள்ளக்கூடியவகையில் உருவாகி வந்த சூழ்நிலையை அமெரிக்க அரசாங்கம் கம்போடியாவில் எடுத்துள்ள நடவடிக்கைகள் சிக்கலுக்குள்ளாகிவிட்டன என்று சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் மாஸ்கோவில் நடத்திய விசேஷ நிருபர்

அவர் அமெரிக்காவின் இந் நடவடிச்கைகளின் காரணமாக வட வியட்னமுக்கு சோவியத் யூனியன் அளிக்கும் ஆயுத உதவிகள் பற்றி மறு பரிசீலனை செய்யப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

### ஜெனிவா மாநாடு

இந்தோ சீனவில் எழுந்துள்ள நிலைமை குறிதது ஜெனிவா மாநாடு போன்ற

னப் படையினர் நிறுத்தியிருக்கின்றனர். ஆனல் கம்யூனிஸ்டுகள் பெரியளவில தென் வியட்னும் மீது தாக்குதல் ஆரம்பித்தால் மீண்டும் அமெரிக்க விமானங்கள் வட வியட்னும் மீது குண்டு வீசும் என்று அமெரிக்கர்கள் அறிவித்துள்ளனர்.

### கம்யூனிஸ்ட்

## பிஜித்தீவு சுதந்திரம் அடையும்

லண்டன், மே. 5

பிரித்தானிய குடியேற்ற நாடாக இருந்து வந்த பிஜித்தீவு சுதந்திரம் பெறவிருக்கின்றது. பிஜித்தீவுக்கு பிரதிநிதிகள் கோஷ்டியொன்று பிரித்தானியா வெளிவிவகார சாம்ராஜ்ய மந்திரி ஷெப்பர்ட்பிரபுவுடன் நடாத்திய பேச்சுவார்த்தையின் பின்னர் இம்முடிவு அறிவிக்கப்பட்டுள்ளது. ஒக்டோபர் மாதம் 10-ம் திகதி பிஜித்தீவு சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப்படும், பசுபிக் சமுத்திரத்தில் இருக்கும் சிறிய தீவான பிஜியில் 50 மக்கள் வாழ்கிறார்கள் பிஜித்தீவின் முக்கிய தொழில் மீன்பிடித் தொளிலாகும்.

## 6 இலங்கையருக்கு உபகாரநிதி

லண்டன். மே. 5

சாம்ராஜ்ய உபகார நிதித் திட்டத்தின்கீழ் சென்ற வருடம் ஆறு இலங்கையர்களுக்கு உயர்கல்விக்கான உபகார நிதிச்சலுகைகள் வழங்கப்பட்டன. அதேசமயம் இத்திட்டத்தின்கீழ் உபகார நிதி பெற்ற பிரிட்டிஷ்பெண்மணி ஒருவர் வித்தியோதய சர்வகலாசாலையில் இலங்கைச் சரித்திரம் பயின்று வருகிறார்.

சாம்ராஜ்ய உபகாரநிதித் திட்டத்தின் [illegible] வருடாந்த [illegible] இவ் விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

## தலைநகருக்கு 15 மைலில் கடும் சண்டை

நாம்பென், மே. 6

வியட்கொங் படையினருக்கும் சிகானூக் ஆதரவாளர்களுக்குமிடையில் கம்போடியத் தலைநகரான நாம்பென்னுக்கு 15 மைல் தூரத்தில் கடும் சண்டை நடைபெறுவதாக கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

தலைநகர் பாதுகாப்பில் பதட்டநிலை நிலவுவதாகவும் கூறப்படுகிறது. மக்கள் தலைநகரிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள். தற்போதைய அரசாங்க ஆதரவுப் படையினர் சிலர் தமது இராணுவ சேவையிலிருந்து விலகி வருகின்றார்கள் எனவும் அறியப்படுகின்றது.

நேற்று பெனும்பென்னுக்கு தென்கிழக்கே 40 மைல் தூரத்தில் உள்ள மீக்கொங் நதிப் பகுதியில் வியட்கொங்கினர் உக்கிரமான தாக்குதலை நடாத்தினார்கள்.

அதேசமயம் அமெரிக்க படையினர் காட்டுப்பகுதியில் வியட்கொங் தலைமை நிலையம் என நம்பப்படும் ஓர் இடத்தைக் கண்டுபிடித்திருக்கின்றார்கள். ஆனல் தரைப்படையோ டாங்கிப் படையோ குறித்த அப்பகுதியை அணுக முடியவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

## வண்ணாத்திப் பூச்சிக்கு ஏகப்பட்ட கிராக்கி

கோலாம்பூர், மே. 5

வண்ணாத்திப்பூச்சிகளை ஏற்றுமதி செய்வதின் மூலமாக பணம் சம்பாதிக்க முடியும் எனமலேசியாகைத்தொழில் முதலாளிகள் கருதுகின்றார்கள். வண்ணாத்திப் பூச்சிகளை ஜப்பானியர் விரும்புகின்றார்கள் எனவே ஜப்பானின் சந்தையில் வண்ணாத்தி பூச்சி ஏற்றுமதிக்கு நல்ல எதிர் காலம் இருப்பதாகக் கருதப்படுகின்றது.

மலேசிய கைத்தொழில் முதலாளியும், கோடீஸ்வரருமான திரு. சான்சுவி தற்போது ஜப்பானில் நடைபெறும் எக்ஸ்போ 70-ல் கலந்து கொண்டு திரும்பியுள்ளார். இவர் எக்ஸ்போ 70-ல் மலேசிய பொருட்காட்சிப்பிரிவில் காட்சிக்குவைக்கப்பட்டுள்ள வண்ணாத்திப்பூச்சிகள் தினம் 350 டொலருக்கு மேற்பட விற்பனைசெய்யப்படுகின்றது எனக் கூறுகின்றார்.

பொருட்காட்சியில் சேமிப்பில் இருந்த வண்ணாத்திப் பூச்சிகள் சில தினங்களில் விலைப்பட்டு விட்டன. அதற்கு பொறுப்பானர்கள் திரும்பவும் மலேசியா சென்று வண்ணாத்திப்பூச்சிகளை ஓசாக்காவுக்கு எடுத்துச் சென்றுள்ளார்கள்.

ஏதென்ஸ் மாநாட்டில்

## இலங்கையும் கலந்துகொள்ளும்

ஏதென்ஸ், மே. 5

கிரேக்கத் தலைநகரான ஏதென்ஸில் ஆரம்பமாகவிருக்கும் சர்வதேச லொத்தர் சபையின் மகாநாட்டில் இலங்கையும் கலந்து கொள்ளவிருக்கின்றது. இம் மகாநாட்டில் மொத்தம் 80 நாடுகள் கலந்து கொள்ளவிருக்கின்றன. இம்மகாநாடு ஒருவாரகாலம்நடைபெறும்.

## தேர்தல் குறித்து இந்திரா நிலை குலைந்து இருந்தாராம்

### கிரி வழக்கில் வாதம்

புதுடில்லி மே 5

இந்திய ஜனாதிபதி வி. வி. கிரியின் தேர்தல் ஆட்சேப வழக்கில் மனுதாரின் வழக்கறிஞர் தமது உரையை சுப்ரீம் கோட்டில் நிகழ்த்தினர்.

திரு. என். சஞ்சீவரெட்டி காங்கிரஸ் கட்சியின் அபேட்சகராக தேர்ந்தெடுக்கப்படுவதை திருமதி இந்திரா காந்தி விரும்பவில்லை. திரு. வி. வி. கிரியை அபேட்சகராக இந்திரா காந்தி விரும்பினர். ஆனல் பெரும்பான்மை திரு. வி. வி. கிரிக்கு எதிராக இருந்ததினல் திரு. ஜெகஜீவன்ராமிஸ் பெயர் பிரேரிக்கப்பட்டது என மனுதார் வழக்கறிஞர் எஸ். சி. மாரிக் தமது வாதத்தில் குறிப்பிட்டார்.

மேலும் தொடர்ந்துதமது வாதத்தில் அவர் கூறியதாவது:-

ஜனாதிபதி தேர்தல் சம்பந்தப்பட்டவரை திருமதி இந்திரா காந்தி நிலை குலைந்திருந்தார் தமது மந்திரிமார்களை உடனடியாக டெல்லிக்கு அழைத்திருந்தார். தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன் திரு. எஸ். சஞ்சீவரெட்டி தங்களது அபேட்சகர் அல்லவெனத் தீர்மானித்தார். திரு. கிரிக்கு வாக்களிப்பது என்றுமுடிவு எடுத்தார்கள்என சாட்சிமூலம் அறியமுடிகின்றது. அதே நேரம் வாக்கு சுதந்திரம் பற்றி திரு கிரி கூறியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு. ஜெகன்ஜீவன்ராமும் திரு. பக்ருத்தீன் அலி அகமத்தும் காங்கிரஸ்தலைவராகஇருந்த நிசலிங்கப்பாவிற்கு ஆகஸ்ட் 11ம் திகதிக்கு முன் எழுதிய கடிதத்தில் எதிர்க்கட்சியினருடன் நடாத்திய பேச்சுவார்த்தைபற்றி குறிப்பிடப்படவில்லை. இரண்டாவது கடிதத்தில் வெறும் வதந்திகளை வைத்து இவ்விரண்டு மந்திரிகளும் நிசலிங்கப்பா மீது குற்றம் சாட்டியுள்ளார்.

சஞ்சீவரெட்டி பற்றி வெளியிடப்பட்ட பிரசுரம் விரிவாக விநியோகப்பட்டிருக்கின்றது. இந்த நோட்டீஸ் பாராளுமன்ற மத்திய மண்டபத்திலும் விநியோகிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது என்றார் மாலிக்.

பிரசுரத்தை வெளியிட்டவர்கள் சிண்டிக்கேட் எதிர்தாளர் எனக் கூறிக் கொண்டார்கள். ஆனல் எமது எதிர்தரப்பினர் தாம் அதற்கு பொறுப்பல்ல எனவும் பிரசுரத்தை வெளியிட்டுள்ளவர்கள் கோழைகளெனவும் கூறியிருக்கிறார்கள் என மாலிக் தனது உரையில் கூறினர்.

## லண்டனில் யானைக்கால் வியாதிபற்றி ஆராயும் இலங்கை விஞ்ஞானி

லண்டன், மே. 5

இலங்கை விஞ்ஞானி ஒருவர் தற்சமயம் லண்டனில் யானைக்கால் வியாதி பற்றி ஆராய்ச்சி நடாத்தி வருகிறார். இவர்தான் டாக்டர். ரி. பொன்னுத்துரை. கொழும்பு சர்வகலாசாலையில் ஒட்டுயிரியல்துறை விரிவுரையாளராகக் கடமையாற்றி வரும் டாக்டர் பொன்னுத்துரை கடந்த 18 மாதங்களாக லண்டன் ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறார். லண்டனிலுள்ள சுகாதார உஷ்ணவலய வைத்தியக் கல்லூரியில் நுளம்புகளால் ஏற்படும் இவ்வியாதி பற்றி ஆராய்வதுடன் இத்துறையில் கலாநிதிப்பட்டம் பெறுவதற்கும் அவர் படித்து வருகிறார்.

'யானைக்கால் வியாதி உயிராபத்தை விளைவிக்கும் கொடிய நோயல்ல என்பதனல் இத்துறை பற்றிய ஆராய்ச்சிகள் [illegible] பெற்றுவருகின்றன. ஆகையால் நோயாளிக்கு நேரடியாக சிகிச்சை அளித்து நோயைத் தடுக்கும் மார்க்கங்கள் பற்றி அறிவது அவசியமாகிறது' என்று அவர் மேலும் தெரிவித்தார்.

டாக்டர் பொன்னுத்துரை தமது ஆராய்ச்சி பற்றி தொடர்ந்து தெரிவிக்கையில் இப்படியான ஒரு ஆராய்ச்சிக்கு லண்டன் தான் உலகத்தில் சிறந்த இடம் என்றும், இங்கு சகல விதமான ஆராய்ச்சி வசதிகளும் இருக்கின்றன என்றும் எடுத்துரைத்தார்.

## 'ஒரு கொடிக்கீழ் நிற்போம்'

பூநகரி, செவ்.

'இலங்கைமுழுவதும் என்றில்லாமல் வட இலங்கை எனச் சிலர் சிந்திக்கிறார்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

க்க அரசாங்கம் கம்போடியாவில் எடுத்துள்ள நடவடிக்கைகள் சிக்கலுக்குள்ளாகிவிட்டன என்று சோவியத் பிரதம மந்திரி திரு. கொஸிஜின் மாஸ்கோவில் நடத்திய விசேஷ நிருபர்கள் மாநாட்டில் கூறினூர்.

ஜெனிவா மாநாடு போன்ற மாநாடுகளுக்கு இப்போது தருணமில்லை. இப்பொழுது செயல்தான் தேவைப்படுகின்றது என்ருர் திரு. கொஸிஜின்.

கம்போடியாவிலிருந்து அமெரிக்காவைத் துரத்தியடிப்பதற்கு உலக நாடுகள் ஒத்துழைக்கவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். அமெரிக்காவின் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கை அமைதிக்கு எந்தவகையிலும் உதவிபுரியவில்லை என்று கூறிய மறு பரிசீலனை செய்யப்படுகின்றது என்றும் குறிப்பிட்டார்.

## ஜெனிவா மாநாடு

இந்தோ சீனுவில் எழுந்துள்ள நிலைமை குறித்து ஜெனிவா மாநாடு போன்ற ஒரு மாநாட்டை நடத்தலாமென்று அமெரிக்கா யோசனை தெரிவித்திருக்கின்றது. ஆனுல் இப்படியான ஒரு மாநாட்டிற்கு இப்போது தருணமில்லை என்று சோவியத் பிரதமர் திரு. கொஸிஜின் குறிப்பிட்டிருக்கின்ருர்.

## குண்டு வீச்சு நின்றது

கம்போடியாவின் எல்லையோரமாகவுள்ள வட வியட்னும் பிரதேசங்களில் குண்டு வீசுவதை அமெரிக்க விமா

டும் அமெரிக்க விமானங்கள் வட வியட்னும் மீது குண்டு வீசும் என்று அமெரிக்கர்கள் அறிவித்துள்ளனர்.

## கம்யூனிஸ்ட் தலைமைமுகாம்

கம்போடியாவில் கம்யூனிஸ்ட்டுகளின் தலைமைமுகாம் இருக்கும் பகுதியை அமெரிக்க விமானப்படையினர் கண்டுபிடித்துவிட்டதாகவும் அப்பகுதியில் குண்டு வீசப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. கம்போடியாவுக்குள் அமெரிக்கத் துருப்புகள் இறங்கியதன் மூலம் எதிர்பார்க்கப்பட்டதைவிட அதிக பலன் கிடைத்திருப்பதாக அமெரிக்கர்கள் கூறுகிருர்கள்.

# ஆர்ப்பாட்டம் செய்த 4 மாணவர்கள் பலி

கம்போடியா சம்பந்தமாக அமெரிக்க அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அமெரிக்காவின் பல இடங்களிலும் ஆர்ப்பாட்டங்களும் வன்முறைகளும் இடம்பெற்றுள்ளன. ஓஹியோ நகரிலுள்ள பல்கலைக்கழகத்தில் ஆர்ப்பாட்டங்களில் இறங்கிய மாணவர்களுக்கும் பாதுகாப்பு படையினருக்குமிடையில் ஏற்பட்ட மோதலின்போது காவல்படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்யநேர்ந்தது. இதில் இரண்டு பெண்கள் உட்பட நான்கு மாணவர்கள் பலியானூர்கள். 15 பேர் காயமடைந்திருக்கிருர்கள். காவல்படையினரில் சிலரும் காயமடைந்ததாகத் தெரிகின்றது. ஒஹியோவில் ஊரடங்குசட்டமும் அவசரகால நிலைமையும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. பல்கலைக்கழகத்தின் ஒரு பகுதியில் மாணவர்கள் தீயிடுவதிலும் வன்முறைகளிலும் இறங்கியபோது காவல்படையினர் தலையிடநேர்ந்தது.

இந்த ஆர்ப்பாட்டங்களின்போது நான்கு மாணவர்கள் இறக்கநேர்ந்தது குறித்து அதிபர் நிக்ஸன் பெரிதும் கவலையடைந்திருக்கிருர். மாணவர்கள் தமது எதிர்ப்புக்களை அமைதியானமுறையில் தெரிவிக்கவேண்டும் என்பதை இச்சம்பவத்திலிருந்துஉணர்ந்து கொள்வார்கள் என்று நம்புவதாகஅதிபர் தெரிவித்திருக்கின்ருர்.

மேரிலேண்ட் பல்கலைக்கழகத்தில் மூன்று நாட்களாக இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்களையொட்டி சுமார் ஆயிரம் பொலிசார் பல்கலைக்கழக வட்டத்துக்குள் பிரவேசித்திருக்கிருர்கள்.

கலிபோர்னிய பல்கலைக்கழகத்திலும் நேற்று வன்முறைகள் இடம்பெற்றன நாடு பூராவிலுமுள்ள பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரையும் வேலைநிறுத்தம் ஒன்றில் இறங்கும்படி அமெரிக்க மாணவர்கள் சங்கம் அழைப்பு விடு திருக்கின்றது.

## செனட் கமிட்டி கண்டனம்

கம்போடியாவில் அரசியல் சட்டத்துக்கு முரணுக நடவடிக்கைகள் எடுப்பதில் அதிபர் நிக்ஸன் இறங்கியிருப்பதாக செனட்சபையில் வெளிஉறவுக்கமிட்டி கண்டனம் தெரிவித்திருக்கின்றது.

கம்போடியாவுக்குள் இறங்கி நடவடிக்கை எடுத்ததின் மூலம் காங்கிரசின் கடமைகளை அதிபர் நிக்ஸன் தாமே மேற்கொண்டுவிட்டார் என்றும் கமிட்டி குற்றஞ்சாட்டியுள்ளது.

அதிபர் நிக்ஸன் இன்று காங்கிரஸின் நான்கு கமிட்டிகளையும் சந்திக்கவிருக்கிருர்.

## ஐ. நா. வில் புகார்

வடவியட்னும்மியர் ஜெனிவா ஒப்பந்தத்துக்கு மாருக கம்போடியாவுக்குள் இருந்துவருவதாக கம்போடியாவின் புதிய அரசு ஐ. நா வுக்குப் புகார் செய்திருக்கின்றது.

## சீனுவின் கண்டனம்

கம்போடியாவில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள தாக்குதல் குறித்து நவசீனு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அமெரிக்காவின் இந்த நடவடிக்கை சீனுவுக்கு ஆத்திரமூட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கின்றது.

---

## நல்லெண்ண தூதுகோஷ்டி

லண்டன், மே 5

525 பேரைக் கொண்ட இளம்கோஷ்டியினர் பிரிட்டனிலிருந்து எதிர்வரும் ஜூலை 5-ம் திகதி சாம்ராஜ்ய நல்லெண்ண சுற்றுலா ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றனர். இவர்கள் இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் தரைமார்க்கமாக 20,000 மைல்வரை சுற்றுப்பிரயாணம் செய்வார்கள்.

முந்திய சுற்றுலாக்களைப் போன்று இம்முறையும் இக்கோஷ்டியில் பெரும்பாலானேர் பிரிட்டிஷ் சர்வகலாசாலைகளிலிருந்தே தெரிவுசெய்யப்படுவர். அத்துடன் பொலிஸ் இலாகா, ராணுவம் உள்ளூராட்சி மன்றம், வைத்தியசாலைகள் ஆகியவற்றிலிருந்தும் இளைஞர்களும் யுவதிகளும் தெரிவுசெய்யப்படுவார்கள்

கைச் சரித்திரம் பயின்று வருகிருர்.

சாம்ராஜ்ய உபகாரநிதித் திட்டத்தின் ஒன்பதாவது வருடாந்த அறிக்கையில் இவ் விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

1959ம் ஆண்டு ஒக்ஸ்போர்ட்டில் நடைபெற்ற சாம்ராஜ்ய கல்வி மகாநாட்டின் போதே முதன் முதலாக இவ்வுபகார நிதித்திட்டம் வகுக்கப்பட்டது. சர்வகலாசாலைக் கல்வி வசதிகளுடைய சாம்ராஜ்ய நாடுகள் ஒவ்வொன்றும் உயர் கல்விப் பயிற்சிக்கு மாணவர்களைப் பரிவர்த்தனை செய்துகொள்வதென இத்திட்டத்தின் கீழ் இணக்கம் தெரிவித்தன.

இது ஒரு மாணவர் பரிவர்த்தனை திட்டம் என்ருலும் பிரிட்டன் போன்ற கல்வியின் முன்னேற்றம் கண்ட நாடுகள் இத் திட்டத்தின் கீழ் பெருந்தொகையில் உபகாரநிதிச் சலுகைகளை வழங்கி வருகின்றன. உதாரனமாக 1968, 69ம் ஆண்டில் பிரிட்டன் 563 உபகார நிதிச் சலுகைகளை வழங்கியது குறிப்பிடத்தக்கது.

---

## ரப்பர் பதனிடும் நவீன இயந்திரம்

கொழும்பு, திங்கள்

ரப்பரை பதனிடும் நவீனகரமான இயந்திரப் பொறியொன்றை இலங்கை பிரிட்டனிடமிருந்து வாங்கவிருக்கிறது. ஒரு மாதத்தில் 100 தொன் ரப்பரை பதனிடும் சக்திவாய்ந்த இயந்திரம் இது.

தோட்டங்களிலிருந்து மரப்பாலாக பெறப்படும் ரப்பரை, இவ் வியந்திரம் செம்மையாகப் பதனிட்டு பொதிகளாக அல்லது சிற்பங்களாக மாற்றிவிடுகிறது. 'டைனட்' எனும் நவீன முறை மூலம் பதனிடப்படும் இந்த ரப்பரை உடனடியாக அப்படியே ஏற்றுமதி செய்யலாம். இவ்விதம் பதனிடும் ரப்பர் செயற்கை ரப்பரைவிட மிகவுயர்ந்த தரமுடையது. 'ஜெட்விமானங்களுக்கும், கனரகமோட்டார் டயர்களுக்கும், அதிர்ச்சி ஈர்க்கும் வஸ்துகளுக்கும், இயந்திர படிவங்களுக்கும் இதனை உபயோகிக்கலாம்.

ரப்பர் உற்பத்தித்துறையிலும் பிளாஸ்டிக்துறையிலும் நிபுணத்துவம் பெற்று விளங்கும் பிரிட்டிஷ் பொறியியல் கம்பனி ஒன்றே இந்த இயந்திரத்தை இலங்கைக்கு வழங்குகிறது. இலங்கையுடன் நைஜீரியாவும், கௌதமாலாவும் இத்தகைய இயந்திரங்களுக்கு கோரிக்கை விடுத்திருக்கின்றன. இந்நாடுகளின் மொத்த கோரிக்கை 120,000 பவுண்களாக மதிப்பிடப்படுகிறது.

இவர் எக்ஸ்போ 70-ல் மலேசிய பொருட்காட்சிப்பிரிவில் காட்சிக்குவைக்கப்பட்டுள்ள வண்ணுத்திப்பூச்சிகள் தினம் 350 டொலருக்கு மேற்படவிற்பனைசெய்யப்படுகின்றது எனக் கூறுகின்ருர்.

---

கடத்தப்பட்ட

## பிரி. அதிகாரி உயிருடன் இருக்கிருர்

கம்பாலா, மே. 5

உகண்டாவில் உள்ள பிரித்தானியதொடர்பதிகாரி திரு லீ. உயிருடன் இருக்கிருர்என அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த திங்கள் கிழமை தொடக்கம் திரு. வீ. திடீரென மறைந்து விட்டார். இவரை புரட்சி இயக்கத்தைச் சேர்ந்த கொரில்லாக்கள்கடத்தி இருக்கலாம் எனநம்பப்பட்டது.

திரு. லீ. உயிருடன் இருக்கின்ருர்என இன்றுஉகண்டா அரசாங்கம்பிரித்தானிய அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கின்றது. அதற்கு பிரித்தானிய அரசாங்கம் நன்றி தெரிவித்துள்ளது.

திரு. லீ. கடந்த சிலதினங்களாக எவ்வாறு மறைந்திருந்தார் எங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டார் என்ற தகவல்கள் அறிவிக்கப்படவில்லை

இலங்கையும் கலந்து கொள்ளவிருக்கின்றது. இம்மகாநாட்டில் மொத்தம் 80 நாடுகள் கலந்து கொள்ளவிருக்கின்றன. இம்மகாநாடு ஒருவாரகாலம்நடைபெறும்.

இம்மகாநாட்டில் ''அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கு உதவிசெய்ய லொத்தர் ஒன்றை நடாத்தவேண்டும்'' என்ற இலங்கையின் தீர்மானம் முக்கியமாக ஆராயப்படவிருக்கின்றது.

---

மைசூர்

## ஆளும் கட்சிக்கு 2 வெற்றிகள்

பெங்களூர், மே. 6

ஜெகஜீவன்ராம்தலைமையிலானகாங்கிரஸ்கட்சிமைசூர் மாநிலச் சட்டசபைஇடைத் தேர்தலில் இரு இடங்களில் வெற்றிஅடைந்துள்ளது

மூன்றுதொகுதிகளுக்கான தேர்தல் முடிவுகளில் இரண்டு வெளியாகின. மேற்படி இரண்டு தொகுதிகளிலும் ஆளும் காங்கிரஸ் கட்சி அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். இதனுல் ஜெகஜீவன்ராமின் தலைமையிலான காங்கிரஸின் பலம் 28 ஆக உயர்ந்துள்ளது மைசூர் மாநில ஆட்சியின் அதிகாரத்திலுள்ள திரு நிஜலிங்கப்பாவின் தலைமையிலான காங்கிரஸின் பலம் 126 ஆகும்,

டம் பெறுவதற்கும் அவர் படித்து வருகிருர்.

'யானைக்கால் வியாதி உயிராபத்தை விளைவிக்கும் கொடிய நோயல்ல என்பதனுல் இத்துறை பற்றிய ஆராய்ச்சியில் அதிக அக்கறை காட்டப்படவில்லை' என்று டாக்டர் பொன்னுத்துரை குறிப்பிட்டார்.

'யானைக்கால் நோய் நுளம்புகளால் பரவுவதால், நுளம்புகளை ஒழிப்பது தான் சிறந்த வழி, ஆனுல் நுளம்புகளோ பெரும்பாலான கிருமி நாசினிகளுக்கு ஈ கொடுக்கும் சக்தியைப்

---

## நித்திரையில் தாக்கினராம்

பருத்தித்துறை, செவ்

கரவெட்டிகிழக்கைச் சேர்ந்த திரு. வி. நமசிவாயம் என்னும் ஆசிரியர் கடந்த சனிக்கிழமை அதிகாலை தமது வீட்டில் நித்திரையில் இருந்த போது இனந் தெரியாத சில நபர்களால் தாக்கப்பட்டதாக பருத்தித்துறைப் பொலிசாருக்குச் செய்தி கிடைத்துள்ளது. மதிலைத் தாண்டிச் சென்றே அந்நபர்கள்அவரைத் தாக்கியதாகத் தெரிகிறது. ஆசிரியரின் சாட்சியத்தைப் பதிவு செய்த பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## நிற்போம்'

பூநகரி, செவ்.

'இலங்கைமுழுவதும் என்றில்லாமல் வட இலங்கை எனச் சிலர் சிந்திக்கிருர்கள் கிழக்குமாகாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியை நிறுத்தியிருக்கிருர்கள். காலக்கிரமத்தில் காங்கிரஸ் எத்தொகுதிகளோடு எல்லை போடப்படுகிறதோ நாம் அறியோம்.

தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற சகல தொகுதிகளிலும் நாம் போட்டியிடுகின்ருேம். அங்கெல்லாம் தமிழரசுக் கட்சியே வெற்றி பெறும் கடந்த காலத்தில் நடந்த ஓரிரு தவறுகள் கூட இம்முறை நடக்காது. எனவே ஒரேகட்சியில் ஒரே கொள்கையில் போட்டியிடுகின்ற எம்மை ஆதரிக்கவேண்டுமென நாம் வேண்டுகின்ருேம்.

திரு. மு. ஆலாசுந்தரம் பூநகரி வாடியடிமைதானத்தில் நடைபெற்ற ட்டத்தில் பேசும் போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார். சமாதான நீதிபதி செல்லத்துரை தலைமையில் இக் கூட்டம் நடைபெற்றது. திரு. வ. நவரெத்தினம் இராசா- சிவசுப்பிரமணியம் நடராசா ஆகியோரும் பேசினா.

---

## கந்தபுராண படனம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன்

மீசாலை திரு நீலகண்ட, வெள்ளைமாவடிப் பிள்ளையார் கோயில் வருடாந்த கந்தபுராண படனம் இன்று முற்பகல் தொடங்கப்படும்.

பல்லாண்டு காலமாகத் தொடர்ந்து படித்துவரும் கந்தபுராண படனத்தை'' மீசாலை பக்தி நெறிக்கழகம் நடாத்திவருகின்றது.

கல்வயல் பிரம்மஸ்ரீ எஸ். சிதம்பரநாதக் குருக்கள் விசேட அபிஷேகத்தை நடாத்திவைப்பார். மேற்படி கழகக் கௌரவ காரியதரிசி கு. வி. மகாலிங்கம், வித்துவான் வ சின்னையா புலவர் ஆ. கணபதிப்பிள்ளை தலக்குருக்கள், தல நிர்வாகஸ்தர் விநாசித்தம்பி. திருவாளர்கள் சுப்பிரமணியம், ஏரம்பமூர்த்தி, திருமதி வைத்தியர் ஏ. வேகுவதி, சண்முகம் உட்பட பலர் சங்கற்பம் செய்து கொள்வர். பின் புராண படனம் ஆரம்பிக்கப்படும். ஆனிமாதம்வரை தினமும் கோயிலில் படிப்பு நடைபெறும்.

---

பாராகுவே நாட்டிலுள்ள

# இஸ்ரேலிய தூதரைக் கொல்ல சதி முயற்சி

# தொடர்பு அதிகாரியின் மனைவி பலியானர்

அஸன்சியான், மே 5

பராகுவே நாட்டிலுள்ள இஸ்ரேலிய தூதரகத்திற்குள் அரபுப் பிரஜைகள் என்று கருதப்படும் மூவர் புகுந்து அங்கிருந்த தொடர்பு அதிகாரியின் மனைவியைச் சுட்டுக் கொன்றதாகவும்இன்னெருவரைக் காயப்படுத்தியதாகவும் கூறப்படுகின்றது.

பாலஸ்தீன விடுதலை இயக்கங்களில் ஒன்ருன அல்பத்தாவைச் சேர்ந்தவர்கள் என்று கருதப்படும் இவர்களில் இருவர் உடனடியாகவே கைது செய்யப்பட்டனர். இஸ்ரேல் கைப்பற்றியுள்ள பகுதிகளிலிருந்து இவர்கள் வந்தவர்கள் என்றும் கூறப்படுகின்றது.

பராகுவேயிலுள்ள இஸ்ரேலிய தூதுவரைக் கொலை செய்ய இவர்கள் முயற்சி செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எகிப்தியரின் நிலைகள்மீது நேற்று கடும் தாக்குதல்களை இஸ்ரேலியர் நடத்தியதாக அறிவித்துள்ளன.

பராகுவேயிலுள்ள இஸ்ரேலிய ராஜதந்திரிகளுக்கு உறுதியான முறையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யும்படி இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் திரு. அபா இபான் கேட்டுக் கொண்டிருக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மிகமிகச் சொற்பமான விஷயங்களைப் பற்றி மிகமிக அதிகமாக அறிந்துகொள்கிறவனே நிபுணன் ஆகிறன்.
—நிகலஸ் எம்பட்லர்.

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் சித்திரை மாதம் 23-ந் திகதி (6-5-70)

## சே. குவேரா இயக்கம்

கியூபா புரட்சி தலைவர்களில் ஒருவரான சே. குவேரா பாணியில் இங்கும் ஒரு புரட்சி இயக்கம் உதயமாகியிருப்பதாக சென்ற சில வாரங்களாகச் செய்திகள் வெளிவந்தன. இந்தச் செய்தி உண்மைதானென்று பொலிஸ் அதிகாரிகளும் உறுதிப்படுத்தினர். கடைசியாகக்கிடைத்த செய்திகளின்படி சமீபத்தில் பாடசாலையை விட்டு வெளியேறிய மூன்று மாணவர்களிடமிருந்தும் ஆசிரியர்கள் என்று கருதப்படும் இருவரிடமிருந்தும் வெடிமருந்துகள், தோட்டாக்கள், வரைபடங்கள், இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் பட்டியல் ஆகியவைகள் நாகல்ல பொலிசாரால் கண்டெடுக்கப்பட்டதாகவும் சந்தேகநபர்கள் ஐவரும் நுவரேலியா நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்பட்டு இம்மாதம் 16-ந் திகதி ரிமாண்டில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது நீதிமன்றத்தில் இந்த ஐவர் மீதும் வழக்குத்தொடரப்படவிருக்கிறது. இவர்கள் பற்றி நாம் இங்கு எதுவும் குறிப்பிட விரும்பவில்லை; அது முறையுமல்ல.

கியூபாவில் வெற்றிபெற்ற புரட்சி இயக்கத்தை லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரப்புவதில் முன்னணியில் நின்றவர் சே. குவேரா அவர் இப்பொழுது உயிருடன் இருக்கிறரா இல்லையா என்பது இந்திய விடுதலை வீரர் நேதாஜி சுபாஸ்சந்திரபோஸ் பற்றிக் கூறப்படுவதுபோல நிச்சயமற்றதாகவே இருக்கிறது. சீனவில் மக்கள் குடியரசை அமைத்த மாசேதுங்கின் புரட்சிப்பாதையும் கியூபாவின் சேகுவேரா புரட்சி இயக்கமும் பல நாடுகளிலும் இளைஞர் மத்தியில் வெகு தீவிரமாகப் பரவத்தொடங்கியிருக்கின்றன. இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் நக்ஸல்பாரி என்ற இடத்தில் ஆரம்பமான இந்த இயக்கம்

சமுதாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளை, மக்களின் கஷ்டங்களை குறைகளை வன்முறைப் போராட்டத்தின் மூலமே தீர்க்கமுடியுமென்றும் ஆயுதப்போராட்டத்தின் மூலமே உண்மையான சோஷலிச ஆட்சியை அமைக்கமுடியுமென்றும் இந்த இயக்கத்தினர் நம்புகின்றனர். இந்த நம்பிக்கையுள்ளவர்கள் இங்குமிருக்கின்றனர். அவர்கள் இதை வெளிவெளியாகவே சொல்லிவருகின்றனர். ஆனலும் பொலிசார் கூறும் இந்த சேகுவேரா புரட்சி இளைஞர் இயக்கத்தினருக்கும் அவர்களுக்கும் தொடர்பிருப்பதாகச் செய்திகளோ, பொலிசாரின் அறிக்கைகளோ தெரிவிக்கவில்லை. இந்த இயக்கத்திற்கு யார் தலைமைதாங்குகின்றனர் என்பது கூட இன்னும் சரியாகத் தெரியவில்லை.

தேர்தல்காலத்தில் இப்படி சில 'புரளி'களைக் கிளப்பிவிடுவது இங்கு சகஜம் என்றுதான் பலரும் நினைத்தனர் இன்னும் இப்படிக் கருதுவோரும் உண்டு ஆனலும் பொலிசார் வெளியிடும் தகவல்களிலிருந்து உண்மையில்லாமலில்லை என்று சொல்லமுடியாது.

ஏன் இந்த இயக்கம் இங்கு உருவாகவேண்டும்? பதவி ஆசையும் அதிகாரமோகமும் கொண்ட அரசியல்வாதிகள் பலர் மக்களின் அடிப்படைக் கஷ்டநஷ்டங்களைச் சரிவர அறிந்து அவற்றுக்குத் தேசியரீதியில் தீர்வுகாண முயற்சிசெய்யாமல் மக்கள் மத்தியில் வேற்றுமையையும் பிளவையும் தூண்டிவிட்டு அரசியல் ஆதாயத்துக்காக ஆட்சிமன்ற ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்க முனைவதுதான் இந்த இயக்கம் இங்கு தலையெடுப்பதானல் தற்கு முக்கியகாரணமாக இருக்கவேண்டும்

விலைவாசி உயர்வு, வேலையில்லாத்திண்டாட்டம் பணக்காரருக்கும் ஏழை

# அரசியல் சாணக்கியத்துக்கு நேர்மை அவசியமா?

# 'எத்துறைக்கும் நேர்மை அவசியம் தான்'

## வாசகநேயர்களின் கேள்விகளுக்கு திரு. கதிரவேலுப்பிள்ளை தரும் பதில்

எம் எஸ் எம் இக்பால் யாழ்ப்பாணம்.

கே. கடந்த 22 வருடங்களாக பல போராட்டங்களை நடாத்தியபோதும், அதிக பாராளுமன்றப் பிரதிநிதிகளைக் கொண்ட தமிழரின் கட்சியாக இருந்தபோதும் சமஷ்டியின் எந்த அம்சத்தையேனும் இதுவரை பெருத தமிழரசுக்கட்சி இனிமேலும் சமஷ்டியை கோருவதில் அர்த்தமுண்டா?

பதில்: 1956-ம் ஆண்டிற்குப் பின்பு தான் தமிழரசுக் கட்சியின்பிரதிநிதிகளைத் தமிழ் மக்கள் பெருப்பாலாகத் தெரிந்தார்கள் அதற்கு முன் தமிழரசுக்



கட்சியின் பிரசார காலமென்று சொல்லலாம். நாம்செய்த பல போராட்டங்கள், ஸ்ரீ எதிர்ப்பு, சிங்கள திணிப்பு எதிர்ப்பு, சத்தியாக்கிரகம் முதலிய பல இயக்கங்களாக இருந்தன. நாட்டிலே சமஷ்டி அரசியல் அமைப்பு அமைக்கப்படவேண்டும் என்று ஒரு போராட்டமும் இன்னும் நடாத்தவில்லை. தமிழ் பேசும் மக்களை முதலில் சமஷ்டி அரசியல் அமைப்பை ஏற்கச் செய்யவேண்டும். அதைச் செய்துள்ளோம் இன்னும் சில தமிழ் பேசும் மக்கள் இதில் நம்பிக்கையில்லாமலிருக்கிறர்கள். அவர்களையும்திருத்தவேண்டும். சிங்கள மக்கள் இறுதியில் சமஷ்டி அரசியலமைப்பை ஏற்பார்களென்பதில் ஐயமில்லை. இலங்கையில் முதல் முதல் 1924-ல் சமஷ்டி அமைப்பு நல்லதென்று சொன்னவர் காலஞ்சென்ற பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களே. பல சிங்கள அரசியல் கட்சிகள் அதை ஏற்றிருக்கின்றன. லாக்கப்படவேண்டும் என்று ஏற்றிருக்கின்றன. இத்தேர்தலில் கட்சியின் ஆதரவில் போட்டியிட ஒரு சிங்களவரே முன்வந்துள்ளார். ஆகவே அரசியல் அதிகாரம் பரவலாக்கப்படவேண்டுமென்ற சமஷ்டிக்கொள்கைக்கு சிங்கள மக்களே இறுதியில் இசைவார்களென்ற நம்பிக்கையுண்டு. இந்த இசைவைப் பெற நாம் தொடர்ந்து முயற்சி செய்யவேண்டும், நாட்டிற்கும் எமக்கும் நல்லதோர் அரசியல் அமைப்பாகிய சமஷ்டி அமைப்புக்கொள்கையை நாம் கைவிடவேண்டிய அவசியமில்லை.

சி. முருகேசு, புத்தூர்

கே: சிறுபான்மையோர் பிரச்னைகளில் ஏன் தலையிடுகிறீர்கள்? தமிழ்க் காங்கிரசைப் போல் ஒதுங்கியிருந்தாலென்ன?

பதில்: தீண்டாமை ஒழிப்பும், சோஷலிச சமுதாயத்தை உருவாக்குவதும் தமிழரசுக் கட்சியின் அடிப்படை கொள்கையிலொன்று இன்னும் நாம் தமிழ்பேசும் மக்கள் எல்லாருக்கும் சமமாகப் பணிசெய்யவேண்டும் பின்தங்கிய மக்களுக்கு முன்னேற்றத்திற்கு வழிகாட்டவேண்டும். தமிழ்க்காங்கிரஸிற்கு தமிழ் பேசும் மக்களெல்லோரும் சரிநிகர்சமானமாக சுதந்திரத்துடன் வாழவேண்டுமென்ற இலட்சியமில்லை, சிறுபான்மைத் தமிழ்மக்களை முக்கியமாக அவர்களிடையே உள்ள சைவ மக்களை பௌத்தராக்கி சிங்களவர்களாக்கும் சதித்திட்டத்தைப் பற்றித் தமிழ்க் காங்கிரஸ் அக்கறை காட்டுவதில்லை. அவர்கள் அச்சிறுபான்மை மககளின் கதியைப் பற்றி அககறையில்லாமல் ஒதுங்கியிருககிறர்கள், [illegible] மககளை முன்னேற்றி மற்றத்

ளின் உரிமைகளை எல்லாம் பெற்றுத்தரமுடியுமென்று ஜி ஜி பொன்னம்பலம் கூறுவது உங்கள் காதில் விழவில்லையா? தமிழ்ககாங்கிரஸிற்கும் ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் என்ன?

பதில்; 1947ல் தமிழ் காங்கிரசை அனுப்பி தமிழினம் பட்ட பெரும் நட்டம் இன்னும் நினைவிருககிறது 10லட்சம் மலைநாட்டு தமிழ் மககள் குடியுரிமையும் வாககுரிமையும இழந்தார்கள் 25 தொகுதிகளில் அத் தமிழ் பேசும் மககள் செல்வாககற்றவர்களானர்கள் எட்டுத் தமிழ்ப் பிரதிநிதிகள் 52ம் ஆண்டு தேர்தலில் பாராளுமன்றம் மலைநாட்டிலிருந்து போகமுடியாமல் இருந்தது. இதனல் தமிழ் மககளுடைய பாராளுமன்றப்பலம் குறைந்தது தனிச் சிங்களச் சட்டம் உருவாக சூழ்நிலை உண்டாயிற்று, கிழககுமாகாணத்தில் பல சிங்கள குடியேற்றத்தினல் சிங்களப்பிரதேசம் ஆனது, அங்கிருந்து சிங்களப் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படும் சூழ்நிலை உருவானது, இப்படிதமிழினத்தின் ஒரு பகுதியை அழிககவும் இருமாகாணங்களில் ஒரு மாகாணத்தை அழிககவும்உடந்தையாயிருந்த தமிழ்க காங்கிரசை அனுப்பினல எஞ்சியிருப்பதும் பறிபோய்விடும்: இன்றும் சிங்கள பௌத்த பாடசாலைகளை உருவாககி தமிழ்சைவ மககளை சிங்கள பௌத்தராககும் திட்டத்தை உருவாககிய அரசாங்கத்திற்கு மீளா அடிமையாகி தமிழ்காங்கிரஸ் ஒத்துழைககிறது, அவர்களை அனுப்பினல் யாழ்ப்பாணத் தமிழ் மககளின் ஒரு பகுதியினர் சிங்கள பௌத்தர்களாக மாற்றப்படுவார்கள். ஆகவே தமிழ்ககாங்கிரஸ் கடசியினை [illegible] தமிழினம் இடம் [illegible] தற்கொலை செய்வதாகும்.

கே: [illegible]

பதில்: ஆம். அவசிய வாழ்க்கையில் எத்துறைககும் நேர்மை அவசியம். நேர்மையற்றவர்கள் தங்கள் மககளை ஏமாற்றி உரிமைகளை விற்கலாம் சிங்களவர்களை ஏமாற்றி உரிமைகளைப் பெற முடியாது. கள்ளருககு மூளையுண்டு. நல்லவர்களுககு மூளையில்லை என்ற ஒரு தப்பபிப்பிராயத்தை அரசியலில் பரப்பி ஆதரவு தேடுகின்ருர்கள் ஒருசிலர். இதற்கு தமிழ்மககள் இடம்கொடுககககூடாது.

சிவகுமார், நெல்லியடி, கரவெட்டி

கே: தீண்டாமை ஒழிப்பு, ஆலயப்பிரவேசம் ஆகிய பிரச்னைகளைச் சட்டரீதியாக நீதிமன்றங்களில் வழககாடி தீர்த்துவைககலாமென்று கூறியுள்ளீர்களே, அப்படியாயின் காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள மாவிட்டபுர ஆலய பரிபாலன சபை மீது வழககுத் தொடர்ந்து தீர்வுகாணமுடியுமா?

ப: ஆம். தீர்வுகாண முடியும். அதற்காகவழககு நடக்கிறது. கிறிமினல் வழககு முடிந்து திரு செ சுந்தரலிங்கம் அவர்கள் குற்றப்பட்டார். உரிமை பெறுவதற்கு அகிம்சைவழியில் சத்தியாககிரக இயககங்களுககு இடமுண்டு. ஆனல் உரிமையைப் பாதுகாககவும், குற்றவாளிகளைத் தண்டிககவும், சட்டம் இருககும் போது. நீதிமன்றத்தில் சட்ட நடவடிககைதான் சிறந்தது. நீதிமன்றங்களின் சட்ட நடவடிககைகளால் நீதியும், நியாயமும் நிலை நாட்டப்படும். அத்தோடு தலத்திலே கிளர்ச்சியும், பேராட்டமும் நடககாமல் தவிர்ககப்படும்.

கே: பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம், சங்கானைத் தேநீர்ககடை பலாத்காரப் போராட்டத்தின் பின் திறககப்பட வில்லையா.

ப: இல்லை, மனமாற்றத்தினல் நடந்தன.

மே 27-ல்

# 'தகநாயக்காவை வீட்டுக்கு அனுப்ப மக்கள் தயார்'

— சிறிமாவோ

காலி, செவ்வாய்

'இங்குள்ள சில ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர்கள் இதுவரைத் தங்கள் பிரசாரக் கூட்டங்களை ஆரம்பிக்கவில்லை. கூட்டணியினரே தீவிரமாக பிரசாரம் செய்து வருகின்றனர். எனவே ஐ. தே. கட்சிக்கு இங்கு வெற்றி கிடைப்பது அசாத்தியம். கூட்டணியின் இந்த உத்வேகத்தை தளரவிடாது 27-ந் திகதி அதற்கு வெற்றியீட்டிக் கொடுப்பது மக்களின் கடமையாகும்.''

காலி மாநகரசபையில் நடைபெற்ற கூட்டணியின் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

காலியில் சதந்திரக்கட்சி வேட்பாளரான திரு. டபிள்யு. டி எஸ். அபேகுணவர்த்தனவை ஆதரித்து நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் திருமதி பண்டாரநாயக்கா தொடர்ந்து பேசுகையில், 'நாட்டிலுள்ள மக்கள் யாவரும் காலி தேர்தலில் முடிவையே ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறர்கள். ஏனெனில் டாகடா தகநாயககாவின் கடசி மாறுந் தன்மையை மககள் பார்கக ஆவலாகவிருககிறர்கள் டாகடர் தகநாயககா லங்கா சமசமாஜககடசி அங்கத்தவராகவே அரசியலில் இறங்கினர். தற்போது ஐககிய தேசியககடசி அங்கத்தவராக அரசியலை விட்டு வெளியேறப்போகிறர், இப்பகுதி மககள் நிச்சயமாக அவரை இந்தத் தடவை ஆடசிமன்றம் அனுப்பிவைககமாட்டார்களென நான் நம்புகிறேன். மே 27-ந் திகதி டாகடர் தகநாயககாவை அவரது வீட்டுககு அனுப்பி வைகக மககள் தயார் என்பதை இங்கு திரண்டிருககும் மககள் தொகை குறிககிறது. காலித் தொகுதி எப்பொழுதும் இடதுசாரிகளுககே உரியது. டாகடர் தகநாயககா பிரதமராகவிருந்த பொழுது அவரைத் தோற்கடித்த பெருமை இடதுசாரிகளுககே உரியது.

காலியின் முககிய பிரச்னை தண்ணீர் பிரச்னையாகும். கண்டியில் இப்பிரச்னையைத் தீர்த்து வைத்தது எங்கள் கடசியேயாகும். இங்கும்

வண வஜ்ரபுத்திரதேரோ வண குணனந்த நாயகக தேரோ உடபடப் பலர் உரையாற்றினர்.

இககூட்டத்தில் ஐககிய தேசியககடசியின் ஆதரவாளர்கள் சிலரும் சுதந்திரககடசியில் சேர்ந்து உரையாற்றினர்கள்.

......

## சோஷலிஸ..

(2-ம் பககத் தொடர்ச்சி]

இன்னும் 20வருடங்களில் இலங்கையின் ஜனத்தொகை அதிகரிக்கும்.

ஒரு சோஷலிஸ அரசு வந்தாலே சமுதாய பொருளாதாரப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும். இதன் மூலமே வேலையற்ருேர் பிரச்னை நீங்கும் அனுதாபத்திற்காக வக்களிக்கக்கூடாது அரசியலில் அனுதாபத்திற்குஇடமேயில்லை.''

திரு. பொன். குமாரசாமி தலைமை உரையின்போது ''நாட்டு மக்களுக்காகவும், ஏழைத் தொழிலாளருக்கும் போராடுவோர் நாமே. சோஷலிசம் மூலமே நாடு முன்னேறமுடியும் உலக நாடுகளின் தலைவர்கள் மாத்திரமல்ல. எமது நாட்டுப் பிரதமர்கூட சோஷலிசத்தையே விரும்புகின்ருர். இலங்கையில் நாணய மதிப்புக் குறைக்கப்பட்டதற்கு ஏகாதிபத்திய வாதிகளின் தலையீடே காரணம்'' என்ருர்.

திரு. எஸ் . மாசிலாமணி, டொமினிக் ஜீவா, திரு நடராசா, திரு ராசா உட்பட வேறு பலரும் பேசினர்.

...—

## புதிய பொலிஸ் நிலையம்

உடுப்பிட்டி, செவ்வாய்

கரவெட்டிப் பகுதிகளில் நடைபெற்ற அசம்பாவிதங்களைத்தொடர்ந்தும், தேர்தல் நெருங்குவதை முன்னிட்டும் நெல்லியடியில் பொலிஸ் நிலையம் அமைக்கப்பட்டு உள்ளது.

நெல்லியடிப் பகுதியில் வழக்கத்திற்கு மாருகச் சலசலப்பு இன்றி அமைதி காணப்படுகின்றது. வீதிகளில் கூட்டமாக நிற்போரையும்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

மும் பல நாடுகளிலும் இளைஞர் மத்தியில் வெகு தீவிரமாகப் பரவத்தொடங்கியிருக்கின்றன. இந்தியாவில் மேற்கு வங்காளத்தில் நக்ஸல்பாரி என்ற இடத்தில் ஆரம்பமான இந்த இயக்கம் இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் பரவிவருகிறது ஆந்திராவில் ஸ்ரீ காகுளம் மற்றொரு நக்ஸல் பாரி என்று சொல்லலாம் அங்கு 'நக்ஸல்பாரிகளை' எவ்விதம் கட்டுப்படுத்துவதென்பது பற்றி மத்திய அரசும் மாநில அரசுகளும் தீவிரமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கின்றன.

இந்த இயக்கம் இங்கு தலையெடுப்பதானால் தற்கு முக்கியகாரணமாக இருக்க வேண்டும்

விலைவாசி உயர்வு, வேலையில்லாத்திண்டாட்டம் பணக்காரருக்கும் ஏழைகளுக்குமுள்ள பெரும் வேறுபாடு சகலருக்கும் சமத்துவம் ஆகியவைகளில் கட்சி அரசியல் வேறுபாடின்றி நல்ல தீர்வு காணும் வரை புதிய இயக்கங்களை அடக்குவது கஷ்டம்தான்: நாட்டின் தலைவர்கள் இவைபற்றி விரைவில் சிந்தித்து தீவிர கவனம் செலுத்தவேண்டியது அவசியம்

ஏற்பாடுகளின்பதில் ஐயமில்லை. இலங்கையில் முதல் முதல் 1924-ல் சமஷ்டி அமைப்பு நல்லதென்று சொன்னவர் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்கள். டொனமூர்க் கொமிஷனர் முன்னும், சோல்பரி கொமிஷனர் முன்னும், கண்டி நாட்டு சிங்களவர்களுடைய கண்டியதேசிய சபை, சமஷ்டி அரசியல் அமைப்பைக் கேட்டது. இன்று இலங்கையிலுள்ள அரசியல் சிங்கள கட்சிகள் அரசியல் அதிகாரம் பரவ

அச்சிறுபான்மை மககளின் கதியைப் பற்றி அககறையில்லாமல் ஒதுங்கியிருககிறார்கள், தீண்டாமை காரணமாகப் பின்தங்கிய மககளை முன்னேற்றி மற்றத் தமிழ் மககளோடு சேர்ந்து இன ஒற்றுமையை உருவாககுவது முககியமானது. ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்ற திருமூலர் வாககின்படி தமிழரககட்சி இயங்குகிறது

கே: தமிழ்க காங்கிரஸ் உறுப்பினர்களை ஏகோபித்த குரலில் பாராளுமன்றத்திற்கனுப்பினால் தமிழ் மகக

பௌத்தர்களாக மாற்றப் படுவார்கள். ஆகவே தமிழ்ககாங்கிரஸ் கடசியினருககு தமிழினம் இடம் கொடுப்பது தற்கொலை செய்வதாகும்.

கே: அரசியல் சாணககியத்திற்கு நேர்மை அவசியமா?

மன் ஆலயம், சங்கானைத் தேநீர்ககடை பலாத்காரப் போராட்டத்தின் பின் திறககப்பட வில்லையா.

ப: இல்லை, மனமாற்றத்தினால் நடந்தன.

கே: அரசாங்கம் பாடசாலைகளை எடுத்ததால் தமிழ்ப்பிள்ளைகளைப் பொறுத்தவரை அவர்களுககே பட்ட தீங்கு என்ன?

ப: பல தமிழ்ப் பாடசாலைகள் மூடப்பட்டன. தமிழ்ப் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக மாற்றப்பட்டன. சிங்களததும் பாடசாலைகளில் உள்ள தமிழ் வகுப்புகள் மூடப்பட்டன. தமிழ்ப் பிள்ளைக்ளுக்கு புதிய தமிழ் பாடசாலைகளை திறக்காமல், சிங்கள பாடசாலைகளை திறப்பதற்கு இடமளித்துள்ளது. விஞ்ஞான பாடங்களையும், தமிழ்ப்பகுதிகளில் படிப்பிக்க தடை உண்டாகி இருக்கிறது. தகுதி வாய்ந்த பட்டதாரிகளை நியமித்து, தமிழ் பிள்ளைகளின் கல்வியை வளர்க்க முடியாமல் இருக்கிறது.

கே: சிங்கள பட்டதாரிகளை விட தமிழ்ப் பட்டதாரிகள் கூடுதலாக வேலையில்லாமல் இருக்கிறார்களா?

ப: இல்லை

கே: மலை நாட்டுத்தமிழனுக்கு சேவை செய்துள்ளோம் என்று கூறியுள்ளீர்களே, நீங்கள் அரசாங்கத்தில் இருந்தபோது அவர்கள் கொடூரமாகச் சுரண்டப்படுவதைப் பற்றி எந்தச் சந்தர்ப்பத்திலாவது குரலெழுப்பியுள்ளீர்களா? அவர்களுடைய நேர்மையான வேலைநிறுத்தப்போராட்டங்களை ஆதரித்தீர்களா?

ப: ஆம். அவர்களின் நலனுக்காக மலைநாட்டில்இலங்கைத் தொழிலாளர் கழகம் என்ற தொழிற் சங்கத்தை ஸ்தாபித்துள்ளோம். மலைநாட்டு தமிழினத்தின் உரிமையை பறித்த தமிழ்க் காங்கிரசின் செயலில் இருந்து தான் அந்த உரிமைகளை மீட்க இலங்கைத் தமிழரசுக்கட்சி உருவானது.

**தமிழன் தயாளச்சந்திரன்**
**வசாவிளான்**

கே: நான் தாழ்ந்த சமூகத்தைச் சேர்ந்தவன். நீரோ உயர்ந்த சமுதாயத்தவர். உம்முடைய சமுதாயத்தில் ஒரு மணப்பெண் தந்து எனக்கு மணம் முடித்து வைப்பீரா?

ப: தாழ்ந்த சமுதாயம், உயர்ந்த சமுதாயம் என்ற வேற்றுமையை நீககஇயங்குகிறோம், அது நீங்கினால் இந்தக் கேள்வி எழாது. திருமணம் என்பது இருவர் மனம் பொருந்தி செய்கின்றதனிப்பட்ட விஷயம் அதில் மற்றவர்களுடைய தலையீட்டிற்கு இடமில்லை

சாரிகளுக்கே உரியது. காலியின் முக்கிய பிரச்னை தண்ணீர் பிரச்னையாகும். கண்டியில் இப்பிரச்னையைத் தீர்த்து வைத்தது எங்கள் கடசியேயாகும். இங்கும் நான் பதவிக்கு வந்ததும் இப்பிரச்னையை உடனடியாகத் தீர்த்து வைப்பேன் எனக் குறிப்பிட்டார்.

நெல்லியடிப் பகுதியில் வழக்கத்திற்கு மாறாக சலசலப்பு இன்றி அமைதி காணப்படுகின்றது. வீதிகளில் கூட்டமாக நிற்போரையும், கடைவாசல்களில் நின்று கதைப்போரையும் பொலிசார் கலைத்துவிடுகின்றனர். இதனால் இங்கு அமைதிநிலவுகிறதாம்.

### சிங்கள - தமிழ்

# "தொழிலாளர் விவசாயிகள் ஒற்றுமைப் படவேண்டும்!"

## வடக்கில் திரு. லெஸ்லி குணவர்த்தன விடுத்த வேண்டுகோள்

மல்லாகம், செவ்.

"சிங்களம், தமிழ் இரு மொழிகளையும் இந்த நாட்டின் அரசகரும மொழிகளாக்க சமசமாஜக்கட்சியினர் பல வருட காலமாகப் போராடினர். இதனால் தென்னிலங்கை மக்களின் எதிர்ப்பு, தாக்குதல் நமக்குக்கிடைத்தது. பின்னர் இன்றுதமிழரசு, தமிழ்க்காங்கிரஸ் உட்பட ஏனைய அரசியல்கட்சிகள் பலவும் ஏற்றுள்ளவாறு சிங்களம் உத்தியோக மொழியாகவும், தமிழுக்கு நியாயமான அந்தஸ்தும் வழங்கும் மொழித் திட்டத்தை சமசமாஜிகள் வகுத்துக் கொண்டனர். அடுத்த பொதுத்தேர்லின் பின் சிறிமாவோ தலைமையில் அமையப் போகும் கூட்டுமுன்னணி அரசாங்கம் இன, மத ரீதியில் பாகுபாடு, வேற்றுமைகள் பாராட்டாது மொழிக் கொள்கை சம்பந்தமாக பொதுவேலைத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள அம்சத்தை நிறைவேற்றும் என வாக்குறுதி தருகின்றேன்."

சண்டிலிப்பாய் புலவப் புலவம் பகுதியில் அண்மையில்நடைபெற்றசமசமாஜக்கட்சி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் பாணந்துறை முன்னாள் எம்பியும் சமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளருமான திரு லெஸ்லி குணவர்த்தன மேற்கண்டவாறு கூறினார். உடுவில் தொகுதி சமசமாஜ அபேட்சகர் திரு வீ. காராளசிங்கத்தை ஆதரித்து இக் கூட்டம் நடைபெற்றது

திரு. குணவர்த்தன மேலும் பேசியதாவது'

கூட்டணியின் மேதின விழாவில் திரண்டிருந்த மக்கள் கூட்டம் அரசாங்கத்தின்மீது கொண்டுள்ள வெறுப்பு. எதிர்ப்பை உணர்ந்துவிட்டதை எடுத்துக் காட்டியது. பிரதமர் டட்லியும் கல்வி மந்திரி ஈரியகொல்லையும் இப்போதுதான் நமதுநாட்டு மக்கள் சுபீட்சம் நிறைந்து வாழ்வதாகப் பெருமைப்படுகின்றனர். நாட்டில் முதலாளித்துவ சக்திகளின் நலன்களே பேணப்பட்டன. சாதாரண பொதுமக்களைவிட முதலாளிகளே சுபீட்சமடைந்துள்ளனர். 65-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்டம்மூலம் டட்லி முதலாளி வர்க்கத்தினருக்கு ஆறரைக் கோடி ரூபா வருமான வரிச் சலுகை வழங்கினார்' பிற நாட்டு உற்பத்திப் பொருட்களை தடைசெய்து உள்ளூர் உற்பத்திப் பொருட்களைப் பெருக்குவது சிறந்த திட்டந்தான். ஆனால் இவ்வகைத் திட்டம் மூலம்நமது நாட்டில் உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் விலை உயர்ந்ததே. கட்டுப்பாட்டு விலைத்திட்டத்தை அரசு வகுக்கவில்லை. 500 வீத லாபத்தை முதலாளிகள் இதனால் பெற்றனர். உணவு உற்பத்தி இயக்கம் என்ற போர்வையில் முதலாளி வர்க்கத்தினருக்கு ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. யூ என் பியின் மொறட்டுவை எம் பிக்கு 3000 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டது இந்நிலங்களில் உற்பத்திப் பெருக்கம் நடைபெறவில்லை. பதிலுக்கு காணியில் மரங்களை வெட்டி கொள்ளை லாபப் பணம் பெற்றனர் ஜீப் வண்டிகளை இறக்குமதி செய்து விற்று யாவா பகுதிகளில் உல்லாசப் பிரயாணத்துக்கும் பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்புவதற்கும் மேற்கொண்டு உபயோகித்தனர். தேயிலை, தென்னை, றப்பர் தோட்ட முதலாளிகள் தாம் உணவு உற்பத்தியில் நஷ்டம் அடைந்ததாகக்கூறி வருமானவரிச் சலுகையையும் பெற்றனர். தேசிய அரசின் பதவிக்காலத்தில் முதலாளிகள் சலுகை பெற்றனர். தவிர சாதாரண மக்கள் வாழ்க்கைச் செலவு உயர்வு, அரிசி வெட்டு இவற்றிற்கு ஆளாகினர். நாணய மதிப்பிழிவு, பீக்ஸ் திட்டம் போன்றவற்றால் பொருட்களின் விலையேற்றமடைந்து குடும்ப வாழ்க்கை நடாத்த மக்கள் கஷ்டமடைகின்றனர். இதனை நமது ஆண்களைவிட குடும்பப் பெண்கள் நன்கு உணர்வர்.

பொருளாதாரத்துறையில் கடந்த 30 வருடங்களாக எந்த அரசாங்கத்தாலும் பெற்றுக் கொள்ளாத கஷ்டங்களை மக்கள் தற்போதைய அரசாங்காலத்தில் அனுபவிக்கின்றனர். 1953-ல் யூ என் பி அரிசி விலையை உயர்த்தியபோது மக்கள் ஹர்த்தால் அனுஷ்டித்து எதிர்ப்புத் தெரிவித்தனர். ஆனால் பங்கீட்டு அரிசி 2 கொத்திலிருந்து இலவசமாக வழங்குவது என்ற போர்வையில் ஒரு கொத்தாகக் குறைககப் போது மக்கள் எதிர்ப்புக் காட்டாது அமைதியாக இருந்தனர். தமக்குத் தீங்கு விளைவித்த அரசாங்கத்தை பதவியிலிருந்து வீழ்த்த மக்கள் பொதுத் தேர்தல் ஒன்று அண்மித்து வருவதை உணர்ந்தே அமைதியாக இருந்தனர். எதிர்பார்த்த சந்தர்ப்பம் மே 27-ல் வருவதால் மக்கள் நிச்சயம் யூ என் பி அரசாங்கத்தை பதவியிலிருந்து இறக்குவர். நமது கூட்டுமுன்னணி தற்போது மக்கள் அனுபவிக்கும் இன்னல்களைப் போக்க திட்டமிட்ட பொருளாதார அபிவிருத்திமூலம் சோஷலிச பாதையை ஏற்படுத்த முயன்று வருகின்றது. சோஷலிச பாதையை நாம் உருவாக்க முயல்வதை முதாளிவர்ககத்தினர் தமது பணத்தின்மூலம் அழிக்க எத்தனிப்பர். 1964-ல் பதவியிலிருந்த கூட்டுஅரசாங்கத்தை வீழ்த்த 13 எம்பிக்களுக்கு லஞ்சம் வழங்கி நமது அரசை வீழ்த்தியதை நாம் மறக்கவில்லை. இச்செயல் மீண்டும் தலைதூக்கலாம்.

தென்னிலங்கைப் பகுதியில் முற்போக்கு சக்திகள் ஒன்றுசேர்ந்து நமது கூட்டணியில் அணி திரண்டுள்ளன. மறுபுறத்தில் பிற்போக்குவாதிகள் ஒற்றுமைப்பட்டு வகுப்புவாதிகளுடன் ஐக்கியப்பட்டு யூ. என். பி யை ஆதரிக்கின்றனர். இருதரப்பினருககும் மத்தியில்தான் அரசாங்கம் நிறுவுவதில் போட்டி, தமிழரசு, தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் யூ. என்.பி.யுடன் கொண்டுள்ள உறவை ஒரு போதும் துண்டிக்க மாட்டா தமிழரசு பொதுத் தேர்தலில் தமது பதவிகளை பாதுகாக்கவே யூ. என் பி யிலிருந்து விலகியது. தமிழ்க் காங்கிரஸ் தொடர்ந்தும் யூ. என். பி யுடன் ஐக்கியப்பட்டுள்ளது. தற்போது நாட்டில் நிலவும் தேசிய ஐக்கியம் முதலாளித்துவ சக்திகள் மத்தியில் மட்டுமே தவிர சாதாரண மக்களிடையே இல்லை. எமது இலட்சியம் சாதாரண விவசாய தொழிலாள சிங்கள - தமிழ் மக்களிடையே உண்மையான தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதே! இதன் மூலம் தான் நமது அடிப்படைப் பிரச்னைகளைத் தீர்க்கலாம்.

காங்கேசன்துறைத் தொகுதிகம்யூனிஸ்ட்அபேட்சகர் திரு. பொன்னம்பலம் பேசியதாவது:-

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து இனவெறியர், வகுப்புவாதிகள் வெளியேற்றப்பட்ட பின்னரே இடதுசாரிகள் கூட்டணி அமைத்துள்ளனர். சுமார் 10ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த தன்மையில் இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இல்லை. சிறிமாவோ தலைமையிலுள்ள கூட்டணி மீது தமிழர் தாராளமாக நம்பிக்கை வைக்கலாம். தமிழருக்கு நீதிவழங்கக் கூடிய திட்டத்தை கூட்டணிவகுத்துள்ளது. யூ.என்.பி.யோ, நேர்மையாக தமிழர் பிரச்சனைகள் குறித்து தேர்தல் திட்டத்தில் எதுவும் தெரிவிக்கவில்லை நாட்டில் நிலவும் வறுமை, பின்தங்கிய நிலை, வேலையின்மைபோன்ற இன்னல்களை நாம் சோஷலிஸ அமைப்பின்மூலம் தீர்த்து வைப்போம். டட்லி-செல்வா - ஜி, ஜி. ஆகியோரிடம் மட்டும் தேசிய மனப்பான்மை இருந்தால் போதாது, அந்நியோன்னியமான பரஸ்பர உறவு தலைவர்கள் மத்தியில் மட்டுமன்றி மக்களிடையேயும் உருவாக வேண்டும். சர்வதேச நோக்கிலேயே இடதுசாரிகள் பிரச்னைகளை தீர்க்க விரும்புகின்றனர்.

திரு வீ காராளசிங்கம் பேசுகையில் தமிழ் வகுப்புவாதிகளால் சிங்கள வகுப்புவாதிகளை வளர்த்து உருவாக்க முடியுமே தவிர நாட்டில் வகுப்புவாதத்தை ஒழிக்க முடியாது என்றார்.

திரு. பொ. நாகலிங்கம், பரிஸ்டர் வீ. சச்சிதானந்தம் ஆகியோரும் பேசினர்.

# சேகுவேரா இயக்கத்தினர் ஐவர் றிமாண்டில்

## ஆயுதங்களையும் தஸ்தாவேஜுகளையும் பொலிசார் கைப்பற்றினர்

கோட்டை, செவ்வாய்

சமீபத்தில் பாடசாலையினின்றும் விலகிய 3 மாணவர்களிடமும் ஆசிரியர்கள் எனக் குறிப்பிடப்டுள்ள மற்றும் இருவரிடமிருந்து அதிகமான துவக்குத் தோட்டாக்கள், சில அழிவுக் கருவிகள், சேகுவேரா இயக்கம் பற்றிய திட்டங்கள், வரைபடங்கள், இவ்வியக்கத்தைச் சேர்ந்தவர்களது பெயர்கள் அடங்கிய பட்டியல்கள் ஆகியன பொலிசாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

மேற்படி சந்தேகநபர்களை ருகலைப் பொலிசார் கைது செய்து நேற்று முன்தினம் நுவரெலியா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள். இவர்கள் ஐவரும் இம்மாதம் 16ந்தேதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர். பொலிசார் இவ்வியக்கம் பற்றிப் புலன்விசாரணை நடத்தியபொழுது சில சேகுவராக்கள் இவ்வியக்கத்திற்காகத் திருட்டு வேலைகளில் ஈடுபட்டமையும் தெரியவந்தது. இத்திருட்டில் ஈடுபடும் மாணவர்களுக்கு வழிவகைகளைச் சில ஆசிரியர்கள் சொல்லிக் கொடுப்பதாகவும் தெரிய வந்தது. இவ்வியக்கம் சம்பந்தமாக ஆய்வு நடாத்த மேலும் விசேஷ இரகசியப் பொலிஸ் குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**சி.சண்முகம்**
**அச்சுவேலி**

கே: நீங்கள் கோப்பாய் ஆஸ்பத்திரிக்குச் செய்தளவு உதவியை அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு ஏன் செய்யவில்லை. இவ்வகையில் கோப்பாயை செல்லப்பிள்ளை, அச்சுவேலியை அனாதைப் பிள்ளை போலும் கவனித்தமை தர்மமா?

ப: கோப்பாய் தொகுதி மக்கள் அனைவருக்கும் பாகுபாடின்ற சேவை செய்கின்றேன். அச்சுவேலி ஆஸ்பத்திரிககு செய்த அபிவிருத்தி(1) மின்சாரம்,(2)டாக்டர், (3) குழாய் நீர்த்திட்டம் அமுலாகிறது. (4)பிரவச விடுதி, இதில் நான்காவது அம்சமான பிரசவ விடுதி பண நெருக்கடி காரணமாக திட்டமிடும் அமைச்சினால் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அச்சுவேலியை நான் புறக்கணிக்கவில்லை. ரூபா ஒரு லட்சம் பெறுமதியான பிரசவவிடுதி தற்காலிக மாக ஒத்திவைக்கப்பட்டாலும், எழுபது லட்சம் பெறுமதியான தொழிற்பேட்டை அச்சுவேலியில் உருவாகியுள்ளது அச்சுவேலி ஆஸ்பத்திரிக்கு வந்த பணத்தை கோப்பாய் ஆஸ்பத்திரிக்கு மாற்றவில்லை,

## நேதாஜிக்கு சிலை

புதுடில்லி, மே. 6

நேதாஜி சுபாஷ் சந்திர போஸின் சிலை அமைக்க வேண்டும் என லோகசபைக்கு ஒருதீர்மானம் கொண்டு வரப்பட்டது. சந்திரபோஸின் சிலையை செங்கோட்டைக்கு முன் நிறுவலாம் எனவும் அத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. சிலைநிறுவுவது பற்றி ஆராயப்பட்டு வருகின்றது. என்றும் ஏற்கனவே தீர்மானித்தபடி காந்தி அடிகளின் சிலை விரைவில் நிறுவப்படும் என்றும் அரசாங்கத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970 ம் ஆண்டு மே மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org